Registered as a news paper in Ceylon

பிலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் ௦ யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 17 ஆம் நாள் துல்கஃதா 4 (30-3-63) சனிக்கிழமை இதழ் 50

**ஈழநாடு**

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

# ‘எங்களை அழைக்காமல் விடின் கவலையில்லை’

## பிரதமரின் ‘தமிழ் மகாநாடு’ பற்றி திரு. ராசமாணிக்கம்

## ‘குறைந்த கோரிக்கையையே ஏற்காதவர்கள் என்ன தருவார்கள்’

கல்லுவாஞ்சிக்குடி, வெள்ளி

**“தமிழ் மக்களின் மொழி உரிமை சம்பந்தமாக அடுத்தமாதம் பிரதமர் ஒருமகாநாட்டைத் தமது வாசஸ்தலத்தில் கூட்டவிருப்பதாகவும் அதற்குத் தமிழரசுக் கட்சியினரை அழைக்கப்போவதில்லையென்றும் ஒரு செய்தி கூறுகிறது. தமிழரசுக்கட்சியினரை அழைக்காமல் விடுவதுபற்றிக்கவலைப்படவில்லை. மகாநாட்டின் பலாபலன்களை ஆவலுடன் எதிர்பார்ப்போம். ஆனால் நாம் சமர்ப்பித்த குறைந்தபட்சக் கோரிக்கைகளைப்பற்றியே ஆராயத்தவறிய இந்த அரசாங்கமா தமிழ்மக்களுக்கு இந்த மகாநாட்டின்மூலம் உரிமைகளை வாரிவழங்கப்போகிறது.**

**இவ்வாறு தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் இன்று விடுத்த ஒரு அறிக்கையில் கேட்டார்.**

தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி. யுமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ‘ஈழநாடு’ பத்திரிகைக்கு விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டதாவது:

பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தமிழ்மொழியின் எதிர்கால ‘அந்தஸ்து’ பற்றி நிச்சயிப்பதற்கு தமது உத்தியோக வாசஸ்தலமான ‘அலரிமாளிகையில்’ அடுத்த மாதம் 10-ந் திகதி வாக்கில் ஒரு மகாநாட்டைக் கூட்டவிருப்பதாகவும் இந்த மகாநாட்டுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்கள் அழைக்கப்படமாட்டார்களெனவும் வடக்கு, கிழக்கு மாகாண ‘பிரதிநிதிகளை’க் கொண்டு இம் மகாநாட்டை நடத்தவிருப்பதாககவும் செய்திவெளிவந்துள்ளது.

### குறைந்தபட்ச கோரிக்கைகள்

இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் நாம் எமது கோரிக்கைகளைப் பல சந்தர்ப்பங்களில் திருமதி சிறிமாவோ அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருக்கிறோம்.

கடைசியாகச் சென்ற சத்தியாக்கிரகத்தின் போதும் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க நீதிமந்திரி செனட்டர் சாம். பி. ஸி. பெர்னண்டோவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது குறைந்தபட்சக் கோரிக்கைகளைச் சமர்ப்பித்தோம். ஆனால் அக் கோரிக்கைகள் இதுவரையில் ஆராயப்படாதது மாத்திரமின்றி அந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக அரசாங்கம் இன்னமும் ஒருமுடிவும் செய்யவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. அன்றுதொட்டு இன்றுவரை தமிழ்மக்களின் மொழி

(5-ம் பக்கம் பார்க்க)

## “சமஷ்டிக் கட்சியிலிருந்து விலகமாட்டேன்”

### திரு. இராசதுரை அறிவிப்பு

மட்டக்களப்பு, வெள்ளி

“தமிழரசுக் கட்சியிலிருந்து நான் விலகமாட்டேன். கட்சிக்கு மாறான நடவடிக்கைகளிலும் நான் ஈடுபடமாட்டேன்” என்று மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை நேற்று மாலை மட்டக்களப்பு முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தெரிவித்தார்.

திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. இராசதுரை மேலும் பேசுகையில் தமிழரசுக் கட்சிக்கும் தமக்கும் ஆரம்பகாலம்முதல் இருந்துவந்த தொடர்பை எடுத்துக்கூறினர்.

“தமிழரசுக் கட்சியிலிருந்து நான் விலகிவிடப்போவதாகவும் கட்சிக்கு மாறான செயல்களில் ஈடுபடவிருப்பதாகவும் சில விஷமிகள் செய்திகளைப் பரப்பிவருகின்றனர்.

கட்சியிலிருந்து நான் விலகப்போவதுமில்லை, மாறான நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதுமில்லை.” என்று திரு. இராசதுரை கூறினர்.

கிழக்கிலங்கைப் பாதுகாப்பு முன்னணிபற்றி திரு. இராசதுரை குறிப்பிட்டுத் தனக்கும்

(5ம் பக்கம் பார்க்க)

கோயில் ஐயர் கொலைவழக்கு

## ‘ஐயரின் சடலம் அநேகமாக சிதைந்து இருந்தது’

### பிரேத பரிசோதனை நடத்திய டாக்டர் சாட்சியம்

சாவகச்சேரி, வெள்ளி

உருத்திரபுரம் கோயில் ஐயர்கொலைவழக்கு இன்று சாவகச்சேரி கோர்ட்டில் மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

உருத்திரபுரம் பிள்ளையார் கோயில் ஐயர் காசிலிங்க சர்மாவைக் கொலைசெய்ததாக முத்தர் வேலுப்பிள்ளை, ஆர். பசுபதி, காலஞ்சென்ற ஐயரின் மனைவி கோகிலாம்பாள் ஆகியோர்மீது குற்றம் சாட்டி கிளிநொச்சிப் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

காசிலிங்க சர்மாவின் பிரேதத்தைப் பரிசோதனை செய்த டாக்டர் குகநாததாசன் இன்று சாட்சியமளித்தார்.

### சிதைந்து காணப்பட்டது

டாக்டர் குகநாததாசன் சாட்சியத்தின்போது கூறியதாவது:

18-1-63-ல் காலஞ்சென்ற காசிலிங்க சர்மாவின் உடலை பிரேத பரிசோதனை செய்தேன். பிரேதம் நாராயண சர்மாவினாலும், குப்புசாமி ஐயரினாலும் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. காசிலிங்க சர்மாவின் உடல் ஒரு சாக்கில் காணப்பட்டது. 2 கடுக்கன்களும் காணப்பட்டன. அநேகமாக உடம்பின் பாகங்கள் சிதைந்து காணப்பட்டது.

முதலாவது எதிரி வேலுப்பிள்ளையின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆர். டி. சிவகுரு குறுக்கு விசாரணை செய்தபோது டாக்டர் குகநாததாசன் கூறியதாவது:

தோலின் சில பகுதிகள் காணப்படவில்லை. அடையாளம் கண்டுபிடிப்பது அதிக கஷ்ட

(5ம் பக்கம் பார்க்க)




சுகாதாரமான நவீன முறைப்படி கைபடாமல் தயாரிக்கப்பட்ட

**ரோஸ் பிராண்ட் சுவீட்ஸ் டொபீஸ்**

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை.

ஒரு முறை சுவைத்தால் போதும்

மறுமுறை டொபி சுவீட்ஸ் வாங்கும்பொழுது

**‘ரோஸ்’ பிராண்ட்**

என்றே கேட்பீர்கள்

## அரசாங்க விளம்பரம்

### வனஇலாகா

N 706—யாழ்ப்பாணம் அரசினர் மரக்காலையில் திகதி 1-4-63-ல் காலை 10 மணியளவில் 46 கூறுகளைக் கொண்ட மரங்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். மறுவிபரங்கட்கு 29-3-63-ல் பிரசுரித்த அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

## அரசாங்க கேள்விப்பத்திரங்கள்

### நீர்ப்பாசன இலாகா

என் 708—யாழ்ப்பாண உப-பிரிவில் உள்ள அக்கராயன்குளத்து பிரிவுவாய்க்கால் 4 இன் கீழ்உள்ள கைவாய்க்கால் 42 முதல் 54 வரை வெட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் 23-4-63 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

என் 709—நுவரெலியா பகுதியைச் சேர்ந்த (1) வகுகல கெடகாகுலம கட்டுதல். (2) நீர்ப்பாசனப் பொறியியலாளர் விடுதி அமைத்தல். (3) நுவரெலியா உப-பிரிவில் பொருட்கள்கொண்டு செல்லுதல். கேள்விப்பத்திரங்கள் 17-4-63வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

இதன் முழுவிபரங்களுக்கும் 29-3-63 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் 1-ம் பகுதி, 2-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாகஇறைவரி உத்தியோகத்தர்கள் கந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும், உப-தபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### நானுட்டான் மேற்கு, கிராமச்சபை

நானுட்டான் மேற்கு கிராமச்சபையின் இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்குத் தேவையான, ஆயுள்வேத வைத்தியர் அதிபர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத மருந்துச்கள் வழங்குவதற்குக்கோரி பதிவுத் தபால் மூலம் 15-4-63 காலை 10 மணிவரை வரும் கேள்விப்பத்திரங்கள் யாவும் என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. விரும்புவோர் 5-4-63 பிற்பகல் 4 மணிவரை முற்பணம் ரூபா 10-00 (பத்து) கட்டிப் போம் எடுத்தல் வேண்டும். (போம்காசு ரூ. 2-00 திருப்பித் தரப்படமாட்டாது) மருந்துக்களின் விபரங்கள் இச்சபைக் காரியாலயத்தில் கேட்டறியலாம்.

அ. சவிரிமுத்து,
கி. ச. அக்கிராசனர்,
நானுட்டான்மேற்கு,
கிராமச்சபை.

26-2-63. 828

## யாழ்ப்பாணமாநகரசபை எல்லைக்குள் நாய் பிடிப்பதற்கான கேள்விப் பத்திரம்

நாய் பிடிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் மாநகர ஆணையாளரால், 15-4-1963-ம்திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களைத் தாங்கிவரும் கடித உறைகளின் இடதுகரையின் மேலே "நாய் பிடிப்பதற்கான கேள்விப்பத்திரம்"என்றுகுறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

பிடிக்கப்படும் நாய்கள் ஒவ்வொன்றிற்கும், நாய்க்குட்டிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகக் கோரப்படும் விகிதத்தைக் கேள்விக்காரர் தமது கேள்வியில் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்வி முடிவுத் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரருக்கு அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டது குறித்தும் உடனடியாக வேலையை ஆரம்பிக்கும்படியும் அறிவித்தல் தரப்படும்.

மாநகர ஆணையாளர் மிகக் குறைந்த கேள்வியை அல்லது வேறு எந்தக் கேள்வியையும் ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவரல்ல.

டி. டி. ஜெயசிங்ஹ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
27-3-1963. 830

வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

## பேறுகால விடுதிகளின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரம்

பேறுகால விடுதிகளின் அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் மாநகரசபை ஆணையாளரால் 15-4-1963-ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுகரையின் மேல்பகுதியில் "பேறுகால விடுதிகளின் அழுக்குத் துணியைச் சலவை செய்வதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

தம்மால் சலவை செய்யப்பட்டு பேறுகால விடுதிகள் ஒவ்வொன்றிற்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அழுக்குத் துணிகள் ஒவ்வொன்றிற்கும் துண்டுரீதியாகத் தாம் கோரும் விகிதத்தை கேள்விக்காரர் குறிப்பிடுதல் வேண்டும்.

கேள்வி முடிவு திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரருக்கு அவரது கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டது குறித்தும் உடனடியாக வேலையை ஆரம்பிக்கும்படியும் அறிவித்தல் கொடுக்கப்படும்.

மாநகர ஆணையாளர் ஆகக் குறைந்த கேள்வியையோ அல்லது வேறு எந்தக் கேள்வியையோ ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டவரல்ல.

ஏற்றுக் கொள்ளப்படும் கேள்விக்காரர் பிணைப்பணமாக ரூ. 50-00ஐச் செலுத்துதல் வேண்டும்.

டி. டி. ஜெயசிங்ஹ
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
27-3-1963. 831

## யாழ். மாநகரசபை கேள்விப்பத்திர அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளைப்பொறுப்பேற்றுசெய்துமுடிப்பதற்கு அரசாங்கத்தில் அல்லது அரசாங்க சார்புள்ள ஸ்தாபனங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் 1963-ம் வருடம் ஏப்ரல் 10-ந் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) சின்னக்கடையில் ஒரு கொட்டில் கட்டுதல்.

(2) மின்சார நிலையத்திலுள்ள காரியாலயத்தில் சிறிய உயர அளவிலான மூடப்பட்ட கழுவும் தொட்டி அமைத்தல்.

(2) மாநகரசபை மராமத்து என்ஜினியரிடம் ரூபா ஐம்பது (ரூ. 50-00) கேள்விப்பத்திர கட்டுப்பணமாகவும் ரூபாஐந்து (ரூ. 5-00) ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துக்காகவும் செலுத்திக் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தக்காரர் தெரிந்தெடுக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டபின் கேள்விப் பத்திரத்துக்காகச் செலுத்தப்பட்ட ரூபா ஐந்து (ரூ. 5-00) திருப்பிக் கொடுக்கப்படும்.

3. கேள்விப்பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் 1963-ம் வருடம் ஏப்ரல் 8-ம் திகதி பிற்பகல் 3 மணிவரை கொடுக்கப்படும்.

4. இந்த வேலைகள் சம்பந்தப்பட்ட இதர விபரங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை மராமத்து என்ஜினியரிடம் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. டி. ஜெயசிங்ஹ,
மாநகரசபைக் கமிஷனர்,
யாழ்ப்பாணம்.

நகரமண்டபம்,
யாழ்ப்பாணம்,
26-3-1963. 829

## விளம்பரம் காங்கேசன்துறைப் பட்டினசபை

என்னுல் இம்மாதம் 18-ம், 19-ம் தேதிகளில் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கொடிச்சீலைபற்றிய விளம்பரத்தையொட்டி படங்கள் கிடைக்க வேண்டிய 25-3-63ம் தேதியாகிய கடைசித் தேதியை 15-4-63-ம்திகதிவரை பின்போடப்பட்டிருப்பதால் இத்தேதிவரை படங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மு. திடவீரசிங்கம்,
தலைவர்,
பட்டினசபை,
காங்கேசன்துறை.

பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன்துறை.
27-3-63. 832

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

C. L. 7545 ஒஸ்டின் 2½ தொன் லொறி நல்ல நிலைமையில்விற்பனைக்குள்ளது. சி. சச்சிதானந்தம், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 812

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணனந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

கசியரும், டிலிவறி கிளாக்கும் தேவை. கசியர் பிணைப் பணம் ரூ. 500. தகுதிக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். சிறீலங்கா சலவைத் தொழிற்சாலை, K. K. S. றேட், சுன்னுகம். 826

### மாணவர் தேர்ச்சி அறிக்கை

தடித்த காகிதத்தில் பாடசாலை விலாசமும் அச்சிட்டு 100 அறிக்கைக்கு ரூ. 10 வீதம் முற்பணத்துடன் ஓடர் அனுப்புக. இரு தினங்களில் அனுப்புவோம். கலாபவனம், பருத்தித்துறை. 827

### வான் விற்பனைக்கு

"நல்ல நிலைமையிலுள்ள (Passenger Van) பிரயாணிகள் ஏற்றும் 1 ஸ்ரீ 791 விற்பனைக்குண்டு. காரியாலய நேரத்தில் வந்து பார்வையிடலாம். ஓட்டோஸ் லிமிட்டெட், 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்". 820

## முள்ளிப்பற்று கி. ச. தேர்தல்

யாழ்ப்பாணம், சனி

முள்ளிப்பற்று கிராமசபைப் பொதுத் தேர்தல் அடுத்த மாதம் 27-ம் திகதி நடைபெறவிருக்கிறது. கிராமசபை 8 வட்டாரங்களில் நான்கு வட்டாரங்களில் போட்டியில்லை. நான்கு வட்டாரங்களுக்கே தேர்தல்நடைபெறவிருக்கிறது.

அச்சுவேலி கிராமசபைத் தேர்தல் அடுத்தமாதம் 19-ம், 20-ம் திகதிகளில் நடைபெறக் கூடுமெனத் தெரிகிறது.

## நினைவு விழா

யாழ்ப்பாணம், சனி

'ஈழகேசரி'ப் பொன்னையா நினைவு விழா இன்று குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. காலையில் பேச்சுப் போட்டியும், பிற்பகலில் பரிசளிப்பு விழாவும், மாலையில் கருத்தரங்கமும் நடைபெறவிருக்கிறது.

1961-ம் வருடம்

# ஆயுள்வேத வைத்தியத்தில் நினைவு கொள்ள வேண்டியது

## சுதேச வைத்திய அபிவிருத்தி இலாகா கமிஷனர் அறிக்கை

கொழும்பு, வெள்ளி

'1961-ம் வருடம் ஆயுர்வேத வைத்தியத்துறையின் சரித்திரத்தில் நினைவிலிருத்தக் கூடிய வருடம். இந்த வருடத்தில்தான் ஆயுர்வேத சட்டம் அமுலுக்கு வந்தது. இந்தச்சட்டம் ஆயுர்வேத வைத்தியத்துக்கும் ஆயுர்வேத வைத்தியர்களுக்கும் புதிய ஸ்தானத்தைக் கொடுத்தது.'

இவ்வாறு சுதேச வைத்திய அபிவிருத்தி இலாகா கமிஷனர் திரு. டபிள்யு. ஜே. பெர்ணுண்டோ 1961-ம் ஆண்டுக்கான தமது நிர்வாக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

கமிஷனர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆயுர்வேத வைத்தியர்கள் சிலர் சட்டவிரோதமான வைத்திய அத்தாட்சிப்பத்திரங்கள் கொடுப்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இது இலாகாவுக்குப் பெரும் பிரச்னையாக இருக்கின்றது. இவ்விதம் தெரிவிக்கப்படும் புகார்பற்றி சுதேச வைத்திய சபையால் நியமிக்கப்பட்டுள்ள விசேஷ கமிட்டி விசாரணை நடத்திவருகிறது.

இந்த விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர்கள் தண்டனைக்குரியவர்களாவார்கள். இவ்வித வேலைகளில் ஈடுபட்டிருந்த இருவைத்தியர்களின் பெயர்கள் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன.

ஆயுர்வேத சாஸ்திரி ஆர். புத்ததாசாவினுல் எழுதப்பட்ட சுஸ்ருத்தாசன் கீதா, அஸ்தங்ஹிகரிதயா ஆகிய நூல்களின் சிங்கள மொழிபெயர்ப்பு வேலைகள் அரசகருமமொழி வெளியீட்டு இலாகாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த இரு நூல்களும் விரைவில் சிங்களத்தில் வெளியிடப்படும். இவை வெளியாகினுல் நீண்டகாலத் தேவையை இது பூர்த்தி செய்யும்.

## நாடகவிழா

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நாடகவிழா இன்று ஆரம்பமாகி மூன்று தினங்கள் தொடர்ந்து நடைபெறவிருக்கிறது.

நாடகம் கல்லூரி மண்டபத்தில் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும். முதல் நாள் மகாஜனக்கல்லூரி நுண்கலை மன்றத்தின் 'உத்தமன் யார்' என்ற நாடகமும், இரண்டாம் நாள் கொழும்பு ராஜ் நகைச்சுவை நாடகமன்றத்தின் 'அவமானம்' என்னும் நாடகமும், மூன்றும் நாள் சண்முகநாதன் குழுவினரின் 'எழுத்தாளன் ஆறுமுகம்' என்னும் நாடகமும் நடைபெறவிருக்கின்றன.

## சீனிக்குப் பதில் பனங்கட்டி

மாவிட்டபுரம், வெள்ளி

சீனிக்குப் பதில் பனங்கட்டியை உபயோகப்படுத்துமாறு மக்களைக் கேட்டுக்கொள்வதென்று காங்கேசன்துறையிலுள்ள தமிழரசுக் கட்சிக் கிளை தீர்மானம் ஒன்றினை நிறைவேற்றியுள்ளது.

திரு. ஆ. தெட்சணுமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கட்சிக் கிளைக் கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## 'பண்பாட்டுக்கு நூல்களே துணை'

### மாநகரசபை அங்கத்தவர் உரை

யாழ்ப்பாணம், சனி

'ஒரு நாட்டு மக்களின் சமயச் சிறப்பே அந்நாட்டு மக்களின் பண்பு. பண்பாட்டிற்கு உறுதுணையாக நூல்கள் இருக்கின்றன. ஆலயத்தோடு நூல் நிலையம் சார்ந்திருப்பது பழங்காலச் சைவப் பண்புக்கு ஓர் எடுத்துக்காட்டு'என்று யாழ்ப்பாணம் மாநகரசபை உறுப்பினர் திரு. சோ. இராசரத்தினம் யாழ்ப்பாணம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையினரின் நூல் நிலையத்தைத்திறந்துவைத்துப் பேசுகையில் கூறினுர்.

திரு. இராசரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

நமது முன்னேர்கள் ஆலயங்கள்தோறும் புராணபடனம், திருமுறைகள் என்பனவற்றை ஆலய வழிபாட்டுக் கிரியையோடு இணைத்துப் போற்றி வந்திருக்கிறுர்கள். ஆலயத்துடன் தொடர்புள்ளதாகவே மடாலயங்களையும் அமைத்தனர். சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள புதிய உணர்ச்சி மகிழ்ச்சி தரக்கூடியது.

சைவப் புலவர் வ. கந்தசாமி பேசுகையில் நாவலரின் நற்ருெண்டினைப் பின்பற்றியே இந்நூல் நிலையம் நிறுவப்பட்டதென்றும் அருள் நிறைந்த கல்விதான் பயனுடைய கல்வி என்றும் குறிப்பிட்டார்.

பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, திரு. க. முருகேசு ஆகியோரும் பேசினர். பிரம்மஸ்ரீ கா. மகேஸ்வரக் குருக்கள் விழாவை ஆரம்பித்துவைத்தார்.

## மாவிட்டபுரம் கொலைச் சம்பவம்

### விசாரணை ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், வெள்ளி

இம்மாதம் 2-ம் திகதி மாவிட்டபுரம் தச்சகடவை மடத்தடி ஒழுங்கையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் சம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டு தலா 5000 ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்ட சகோதரர்களான சின்னத்தம்பி இராசையா, கனகரத்தினம், பாலசிங்கம் ஆகிய மூவரும் இன்று மல்லாகம் நீதிபதி திரு. வௌ.வி. டி. தாமோதரம் முன்னிலையில் ஆஜரானுர்கள். காங்கேசன்துறைப் பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா அரசாங்க பரிசோதகரின் அறிக்கை இன்றும் வராமையால் வழக்கை வேறு ஓர் திகதிக்கு ஒத்திவைக்கும்படி நீதிபதியிடம் கோரினுர். நீதிபதி பொலிசாரின் வேண்டுகோளை ஏற்று வழக்கை அடுத்த மாதம் 11-ம் திகதிக்கு ஒத்திவைத்து சந்தேக நபர்களை பழையபிணையில் செல்லும்படியும் 11-ந் திகதி கோர்ட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம

(8 ம் பக்கம் பார்க்க)

# தஞ்சை ஜில்லாவில் எலி ஒழிப்பு இயக்கம்

சென்னை, மார்ச் 27
தஞ்சை ஜில்லாவில் பயிர்களுக்குப் பெரும் நாசத்தை விளைவித்துவரும் எலிகளை ஒழிக்க இப்போது தீவிர இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த சில காலமாக இந்த ஜில்லாவில் பயிர் நிலங்களில் எலிகளின் எண்ணிக்கை பெருமளவுக்கு அதிகரித்ததைத் தொடர்ந்து நெற் பயிர்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே எலி ஒழிப்பு இயக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி எலிகளைப் பிடித்துக் கொல்ல விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் உதவி செய்யுமாறு விவசாய இலாகா சிப்பந்திகளுக்கு சென்னை சர்க்கார் உத்தரவிட்டுள்ளது.

சமீபகாலமாக எலிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதற்குக் காரணம் என்ன என்பதுபற்றி ஆராயுமாறு இந்த ஜில்லாவில் உள்ள அதிகாரிகளுக்கு விவசாய இலாகா டைரக்டர் உத்திரவிட்டுள்ளார். ஆடுதுறையில் உள்ள விவசாய ஆராய்ச்சி நிலையத்தினர் இந்த பிரச்னைபற்றி ஆராய்ந்துவருகின்றனர்.

எலிகள் பெருகாமல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வகையில் எலிகளின் இனப்பெருக்கம், இதற்கான சாதகமான சூழ்நிலைகள், எலிகள் பெருகாமல் தடுப்பது எப்படி என்ற விவரங்களுடன் அடங்கிய சுவரொட்டிகளை அரசாங்கம் ஆயிரக்கணக்கில் அச்சிட்டுவருகிறது. இவை கிராம வாசிகளிடையே விநியோகிக்கப்படும். எலிகளை பூராவாக ஒழிக்கமுடியாவிட்டாலும்கூட எலித் தொல்லையை கட்டுப்படுத்த முடியும் என்று அதிகாரிகள் கருதுகின்றனர். கண்மூடித்தனமாக பாம்புகளைக் கொன்றதால் தான் எலிகள் அதிகரித்துள்ளன என்று ராஜ்ய வனவிலங்குத் துறையினர் கூறுவதை அரசாங்க வட்டாரத்தினர் மறுக்கவில்லை என்றாலும்கூட அதற்காக பாம்புகள் பெருகுவதை அனுமதிப்பது சரியாகாது என்று கருதுகின்றனர்.

## பல இடங்களில் பூமி அதிர்ச்சி

லண்டன், மார்ச் 29
நேற்று உலகின் பல பகுதிகளில் பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
சென்ற புதன்கிழமையும் இவ்வாறு பூமியதிர்ச்சி பல இடங்களில் ஏற்பட்டது.

ஐஸ்லாந்தில் நேற்று ஏற்பட்ட பூமியதிர்ச்சியால் கோவில் மணிகள் பலமாக அடித்தன. பல சுவர்களில் வெடிப்புக் கண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா ராக்கெட் அனுப்பியது சந்திரமண்டலத்தை அடைய நம்பிக்கை

வாஷிங்டன், மார்ச் 29
அமெரிக்கா நேற்று 470 தொன் நிறையுள்ள தனி ராக்கெட் ஒன்றை வானவெளிக்கு வெற்றிகரமாக அனுப்பியது.
சந்திரமண்டலத்துக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் இது நம்பிக்கை அளித்துள்ளதாக அமெரிக்கா கருத்து வெளியிட்டுள்ளது.

1970-ம் வருடத்துக்குள் சந்திரமண்டலத்துக்கு மனிதன் சென்றுவிடலாம் என அமெரிக்க விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## பெண்களுக்கு காது கூர்மை!

செயிண்ட்லூயி, மார்ச் 28
"ஆண்களைவிட பெண்களுக்கே காதுகேட்கும் சக்தி அதிகம்" என்று இங்குள்ள பிரபல மனோதத்துவ நிபுணரான டாக்டர் ஜான் எப். போர்சோ கூறுகிறார். ஆராய்ச்சியின் அடிப்படையில் அவர் இத்தகவலை தெரிவித்துள்ளார்.

"வயது ஆக ஆக ஆண்களுக்கு சீக்கிரம் காது மந்தமாகிவிடுகிறது. பெண்களுக்கோ இவ்வளவு விரைவில் காது மந்தமாவதில்லை" என்று அவர் சொல்கிறார்.

"சதாரணமாக வயது ஆக ஆக காது கேட்கும் சக்தி குறைகிறது. ஆனல் இதிலும் கூட ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே மாறுபாடு உள்ளது. ஆண்களுக்கு 32வது வயதில் காதுகேட்கும் சக்தி குறைகிறது. ஆனல் பெண்களுக்கே 37 வது வயதில்தான் காது கேட்கும் சக்தி குறைகிறது. சுமார் 15 வருடங்களில் ஆண்களுக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு காது மந்தம் ஏற்படுகிறது. பெண்களிடையே இந்த அளவுக்கு இவ்விதம் ஏற்படுவதில்லை" என்கிறார் டாக்டர் கோர்சோ.

சுமார் 912 பேர்களிடம் டாக்டர் கோர்சா இதுபற்றி ஆராய்ச்சி நடத்தினர். இவர்கள் 18 முதல் 65 வயதுக்கு உட்பட்டவர்கள். இந்த ஆராய்ச்சியின் போது ஒரேஒரு பெண் தவிர மற்ற பெண்களுக்கு ஆண்களைவிட செவிநுட்பம் அதிகமானதாக உள்ளதாக டாக்டர் கோர்சோ கண்டுபிடித்தார். காதுகேட்கும் சக்தியில் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே வேறுபாடு இருப்பதற்கு காரணம் என்ன என்பதுபற்றி அவர் எதுவும் சொல்லவில்லை

## இறுக்கமான உடைக்கு எதிர்ப்பு

ஜலந்தர், மார்ச் 26
பெண்கள் இறுக்கமான உடைகளை அணியக்கூடாது என்று பஞ்சாப் ராஜ்ய முதல் மந்திரி பிரதாப்சிங் கெய்ரோன் கருத்துத் தெரிவித்தார். ஜலந்தர் நகரில் கன்யா மகா வித்யாலயாவைச் சேர்ந்த மாணவிகள் கூட்டத்தில் அவர் பேசுகையில் "பெண்கள் இறுக்கமான உடைகள் அணிவதை நான் வெறுக்கிறேன். இவ்வித ஆடைகளை அணியும் பெண்களால் எப்படித்தான் நடமாட முடிகிறதோ தெரியவில்லை" என்றார். இவ்விதமான ஆடைகளை அணிவதால் உடல் நலனுக்கு பாதகம் ஏற்படும்என்றும் அவர் கூறினர்.

செருப்புகளை அணிவது 'ற்றி அவர் குறிப்பிடுகையில் செருப்புப் போட்டு நடந்தால் ஒருவருடைய இயல்பானநடை பாதிக்கப்படுகிறது என்றார்.

## நூல்கள் விற்பனை!

திருக்கோணமலை, வியாழன்
திருக்கோணமலை நகராண்மைக் கழக நூல்நிலையத்தில் பாவனைக்கு லாயக்கற்றதாகக் கணிக்கப்பட்ட ஐந்நூறு புத்தகங்கள் விற்பனை செய்யப்படவிருக்கின்றன. இப் புத்தகங்கள் எல்லாம் ஆங்கில மொழியில் எழுதப்பட்டவை. பிரபல நாவலாசிரியர் டி. எச். லோறன்ஸின் நூலும் இவற்றில் இடம்பெற்றுள்ளனவாம்.

## தடியர் கடை!

நியூயார்ச், மார்ச் 28
நியூயார்க் நகரில் உள்ள ஒரு கடையில் உடல் பெருத்தவர்களுக்கு மட்டுமே சாமான்கள் விற்கப்படுகின்றன. அதுவும் 210 றாத்தல் எடைக்குமேல் உள்ளவர்களுக்காகவே இக்கடை நடத்தப்படுகிறது. இந்த அதிசயக் கடை கடந்த நூறு ஆண்டுகளாக நடத்தபபட்டு வருகிறது. இந்தமாதம் தான் இக்கடை நூற்றாண்டு விழாவைகொண்டாடியது. இக்கடையின் வாயிலில் உள்ள பலகையில் எழுதப்பட்டுள்ளது இதுதான்: "உலகில் ஒவ்வொருவரும் உடல் பருத்தவராக இருந்தால் உலகில் யுத்தமே இருக்காது."

## திருமலையில் தமிழியக்கம்

திருக்கோணமலை, வியாழன்
இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் 'எல்லாம் தமிழ்' இயக்கத்தை சித்திரை 8-ம் திகதி ஆரம்பிக்கவிருக்கின்றதையொட்டி இப்பொழுதிருந்தே திருமலைவாழ் தமிழ் பேசும் மக்களில் பெரும்பாலோர் அரசாங்க அலுவலகங்களுடன் தமிழில் தொடர்புகொள்ள ஆரம்பித்துள்ளனர். முன்னர் வந்ததைவிட இப்பொழுது அதிகமான தந்திகள் தமிழில் திருமலை பெரிய தபாற்கந்தோர் மூலம் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

## அதிகம் சிகரெட் பிடித்தால் ஆயுள் குறையும்

நியூயார்க், மார்ச் 27
"சிகரெட் பிடிப்பதுபோன்ற புகைப்பிடிக்கும் பழக்கம் காரணமாக ஆயுள் குறைகிறது என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் உள்ளன" என்று டாக்டர் ஹேவர்ட் சி டேலர் என்னும் அமெரிக்க டாக்டர் தகவல் தெரிவித்துள்ளார்.
"புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்களைவிட, அதிக அளவுக்கு இப்பழக்கத்தைக் கொண்டவர்களுக்கு 65 வயதுக்கு முன்பாகவே மரணம் ஏற்படக்கூடிய ஆபத்து இரண்டு மடங்காக உள்ளது என்று சமீபத்தில் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது" என டாக்டர் டேலர் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் கூறுகையில், "கடந்த வருடத்தில் அமெரிக்காவில் 40 ஆயிரம்பேர் சுவாசப்பை புற்று நோயினல் இறந்தனர். இதில் 75 முதல் 95 சத வீதத்தினர் சிகரெட் பிடிக்கும் பழக்கம் காரணமாக சுவாசப்பை புற்றுநோய் ஏற்பட்டு இறந்தனர்" என்று கூறினர்.
அவர் தொடர்ந்து சொன்னதாவது: சிகரெட் பிடிப்பதற்கும் சுவாசப்பை புற்று நோய் ஏற்படுவதற்கும் சம்பந்தம் உள்ளதா என்பது பற்றி இனியும் ஆராய்ச்சி நடத்தத் தேவையில்லை. சிகரெட் புகைப் பிடிப்பதானது சுவாசப்பையில்புற்றுநோயை ஏற்படுத்துகிறது என்பதில் சந்தேகமே இல்லை. சிகரெட் புகையினல் ஏற்படும் விஷ பொருளை பிராணிகளுக்குச் செலுத்தினல் அவற்றுக்குத் தோலில் புற்றுநோய் ஏற்படுகிறது என்பதும் ஆராய்ச்சியிலிருந்து தெரியவருகிறது. புகைப் பிடிப்பதால் ஏற்படும் ஆபத்தானது நாளாவட்டத்தில் தான் ஏற்படுகிறதுஎன்ற காரணத்தினல் இப்பழக்கம் கொண்டவர்கள் இதுபற்றிய ஆபத்தை உணருவதில்லை. ஆனல் இந்த ஆபத்தை டாக்டர்கள் உணர்ந்துள்ள காரணத்தால் கடந்த சில வருடங்களாக டாக்டர்களிடையே சிகரெட் பிடிக்கும் பழக்கம் குறைந்து வருகிறது. இவ்வாறு டாக்டர் டேலர் கூறியுள்ளார். இதுபற்றி அமெரிக்க வைத்தியசங்கத்தின் தற்போதைய இதழில் எழுதியுள்ள கட்டுரையில் டாக்டர் டேலர் இவ்வாறு கருத்துத்தெரிவித்திருக்கிறார்.

<u>ரஷ்ய</u>

# 'கப்பலைத்தாக்கியது அமெரிக்காதான்' காஸ்ட்ரோ கண்டனம்

ஹவாஞ, மார்ச் 29
**கியூபா துறைமுகத்தில் ரஷ்ய கப்பலைத் தாக்கியதற்கு முழுப் பொறுப்பாளிகள் அமெரிக்கர்கள்தான் என கியூபா பிரதமர் டாக்டர் பிடல் காஸ்ட்ரோ அறிவித்துள்ளார்.**

வர்த்தகக் கப்பலைத் தாக்குவது மிகவும் அநாகரிகமான செயல் என்றும், இவ்விதம் செய்வது நல்ல சூழ்நிலையைக் கெடுத்துவிடும் என்றும் கியூபா பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விதம்அமெரிக்கா நடந்துகொள்ளுமானல் நெடுந்தூர குண்டு விமானங்களையும், ஆயுதங்களையும் வாங்கவேண்டியிருக்கும் என காஸ்ட்ரோ எச்சரிக்கை செய்துள்ளார்.

சீனி ஏற்றிச் சென்ற ரஷ்யக் கப்பல் இம்மாதம் 16-ம் திகதி கியூபா துறைமுகத்தில் தாக்கப்பட்டது சம்பந்தமாகவே கியூபா பிரதமர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## 10 தொழிற் சங்கங்கள் ஆட்சேபம்

கொழும்பு, வெள்ளி
கொழும்பு ஆஸ்பத்திரிகளின் சூப்ரின்டன் டாக்டர் எம். ஜே. டி' எஸ். ஜெயசேகரா ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றும் ஊழியர்களின் விவகாரங்களில் எல்லை மீறி, ஜனநாயக முறைக்கு முரணுகத் தலையிடுவதாக பத்து தொழிற் சங்கங்கள் கூட்டாக ஆட்சேபம் தெரிவித்துள்ளன.

சூப்ரின்டனின் திறமையற்ற நிர்வாகத்தினல் பொதுமக்கள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகவேண்டியிருப்பதாகவும் மேற்படி தொழிற் சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

## நிலச்சுவாந்தார்கள்!

லண்டன், மார்ச் 28
பிரிட்டனில் சொந்தத்தில் வீடு உள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1951-ம் ஆண்டில் பிரிட்டனில் 29 சதவிகிதத்தினர் தங்களது சொந்த வீட்டில் குடியிருந்தனர். இப்போது இந்த எண்ணிக்கை 43 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. இத்தகவலை பிரிட்டிஷ் வீட்டுவசதி ஸ்தலஸ்தாபன மந்திரி சர். கீத் ஜோசப் சமீபத்தில் பேசிய கூட்டம் ஒன்றில் தெரிவித்தார். 1970-ம் ஆண்டுக்குள்ளாக இது 50 சத விகிதமாக உயரும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

## 'நொண்டி' பிச்சைக்காரர்கள் மரம் ஏறினர்

குருநாகலை, வெள்ளி
இங்குள்ள சில பிச்சைக்காரர்கள் தாம் நொண்டிகள் எனப் பாசாங்கு செய்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்த சமயத்தில் பொலிஸார் இவர்களைப் பரிசோதனையிடச் சென்றனர். பொலிஸாரின் வருகையை அறிந்த இந்த பிச்சைக்காரர்கள் ஓட்டம்பிடித்து பலா மரத்தில் ஏறினர்கள்.
இவர்களைப் பின்னர் பொலிஸார் பிடித்து வழக்குத் தொடர்ந்தபோது மக்களை ஏமாற்றிய குற்றத்துக்காக ஒவ்வொருவருக்கும் தலா ரூ. 5 அபராதம் விதிக்கப்பட்டது.

## ஜி. ஸி. ஈ. தராதரப் பத்திரங்கள்

கொழும்பு, வெள்ளி
1952-ம் வருடத்திலிருந்து 1955-ம் வருடம்வரை இடம்பெற்ற பரீட்சைகளில் ஆறு பாடங்களுக்குக் குறைந்த பாடங்களில் சித்தியெய்தியவர்களுக்கான தராதரப் பத்திரம் இப்பொழுது அனுப்பபடவிருக்கும் 160,000 தராதரப் பத்திரங்களுள் இருக்கமாட்டாது என பரீட்சை இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
1952-ம் வருடத்திலிருந்து 1959-ம் வருடம்வரையான கால எல்லையுள் இடம்பெற்ற ஜி. ஸி. ஈ. பரீட்சையில் தோற்றி 6 பாடங்களுக்குக் குறைந்த பாடங்களில் சித்தியடைந்தவர்கள் தமது தராதரத்தைப் பெற விரும்பினல் அவர்கள் இலாகாவுக்கு இது குறித்து விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளவேண்டுமென அதிகாரி தெரிவித்தார்.

## காலிக்கு மீண்டும் மாநகரசபை அந்தஸ்து

காலி, வெள்ளி
காலிக்கு மீண்டும் மாநகரசபை அந்தஸ்து கொடுக்க ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் உத்தேசித்துள்ளதாக அறியப்படுகிறது.

காலி முன்னர் மாநகரசபையாக இருந்தபோது வசூலிக்கப்படவேண்டிய பணம் வசூலிக்கப்படாதிருந்ததாலும் நிதிநிலைமை சீராக இல்லாததாலும் அந்த அந்தஸ்து வாபஸ் பெறப்பட்டது. ஆனல் இப்பொழுது நிலைமை சீராக்கப்பட்டுள்ளதால் இவ்விதம் மாநகரசபை அந்தஸ்து வழங்கப்படவிருக்கிறது.

## குருப் பட்டம்

திருக்கோணமலை, வியாழன்
திருக்கோணமலை சென். யோசப் தமிழ்க் கல்லூரி முன்றலில் வைத்து திருக்கோணமலை அதிமேற்றிராணியார் இக்னேஷயஸ் கிளென்னியால் ஐந்து குருவானவர்களுக்கு குருப்பட்டம் தரிக்கப்பட்டது. ஐவரில் மூவர் அமெரிக்க குருவானவர்கள். ஒருவர் இத்தாலியரு, மற்றவர் இலங்கை, திருமலை வாசியாவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஐவரையும் பாராட்டி மாலையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

### மணி வாக்கு

மனிதவர்க்கம் வாழ வேண்டுமானால், சத்தியம் அகிம்சை வழிகளை அதிகமாகப் பின்பற்ற வேண்டும். விருப்பம் மட்டும் இருப்பின் இவ்வழிகளைப் பின்பற்றுவது மிக சுலபம். மனிதனின் அசமந்தம் காரணமாகவே அவ்வழிகள் கடினம்போல் காணப்படுகின்றன.

— மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELANADU: National Tami Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 17 உ (30-3-63)


## தமிழ்க் காங்கிரஸ்

யாழ்ப்பாணத்திலே இன்று கூடும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் வாலிப முன்னணி மகாநாடு, ஒரு முக்கியமான சம்பவம். இதிலிருந்து சில நல்ல பலன்களும் ஏற்படக் கூடும். தமிழ்க் காங்கிரஸ் ஒரு பழைய ஸ்தாபனம். அது சமூகத்துக்கும் நாட்டுக்கும் சேவைசெய்துள்ளது. அதன் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், நாட்டிலும், தமிழ்ச் சமூகத்திலும் ஒரு முக்கியஸ்தர். அவர் இன்று ஒரு எம். பி. யாக இல்லாததும், அக்கட்சியினருக்கு பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் இல்லாததும் அக்கட்சியின் செல்வாக்கைக் குறைத்திருக்கலாம். எனினும் அக்கட்சியும் அதன் தலைவரும் செய்துள்ள சேவைகளை மறந்து அலட்சியம் செய்யமுடியாது.

வேறுசில ஸ்தாபனங்களையும் தலைவர்களையும்போல் தமிழ்க் காங்கிரஸும் அதன் தலைவரும் சில தவறுகள் செய்திருக்கக்கூடும். உலகிலே தவறுகள் செய்யாத அரசியல் கட்சிகளோ, தலைவர்களோ இருப்பது அருமை. தவறு பெரிதாக இருக்கலாம் அல்லது சிறிதாக இருக்கலாம். தவறைவிட, அதிக வெற்றிகளை சில அரசியல் கட்சிகள் பெற்றிருக்கலாம். இலங்கையிலே தமிழ்க் காங்கிரஸ்மீது அதன் அரசியல் எதிரிகள் குற்றங்கள் சாட்டுவதாயின், வேறுவித குற்றங்களை மற்றக கட்சிகள்மீதும் சுமத்தவும் கூடும்.

இன்று இலங்கையில் தமிழ்ப்பேசும் மக்களின் நிலைமை மிக மிக அதிருப்திகரமானது. அரசியல் வாழ்விலே அவர்கள் நிலையைப்பலப்படுத்தி, அவர்கள் கண்ணியமாகவாழ நடவடிக்கைகள் எவ்வளவு சீக்கிரத்தில் எடுக்கப்படுகிறதோ அவ்வளவும் நல்லது. இதற்குத் தமிழ்ப்பேசும் சமூகத்திலுள்ள பல்வேறு பகுதியினரிடையிலும், ஓரளவு ஒற்றுமையும், நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் ஏற்படவேண்டியது மிகமிக அவசரமும் அவசியமுமாகும். இலங்கையின் பொதுவாழ்விலே இச் சமூகம் மானத்துடனே வாழவேண்டுமாயின், இவ்வித ஒற்றுமையும் ஒத்துழைப்பும், நல்லெண்ணமும் அவசியத்தேவைகளாகும். சமூக நன்மைக்காக கட்டுப்பாடான திட்டம் வகுப்பது பற்றி தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் போன்ற முக்கிய அரசியல்கட்சிகள், எங்கெங்கே சாத்தியமோ அங்கங்கே ஒற்றுமையாகக் காரியங்கள் செய்ய முயலுமென்றே நம்புகிறோம். இந்த இரு ஸ்தாபனங்களும் அவற்றின் தலைவர்களும் தங்களுக்குள் ஓரளவு ஒற்றுமைக்குவர முடியுமாயின், மற்றக் கட்சிகளிலுள்ள தமிழ்ப்பேசும் தலைவர்கள், தனிப்பட்டவர்கள் இவர்களில் பலரும், அந்த ஒற்றுமையான நடவடிக்கையை ஆதரிக்கக்கூடும் இவ்விதமான முடிவு மிக விரும்பத்தக்கதுடன், இவ்விதம் ஏற்படுமாயின் அதைத் தமிழ்ப்பேசும் மக்கள் அனைவருமே மகிழ்ச்சியுடன் வரவேற்பர்.

இன்றுகூடும் தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணி மகாநாட்டிலே காங்கிரஸின் எதிர்காலச் செயல் திட்டங்கள் அமைக்கப்பட இருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது மிகப்பெரிய பொறுப். திரு. ஜி. ஜி. போன்ற அனுபவமும், துணிச்சலும் மிக்க தலைவர், இன்றைய சமூகத்தின் அவசர தேவைக்கான முறையில் ஒற்றுமையாக சேவைசெய்ய முன்வருவாரென்றே நாம் மனப்பூர்வமாக நம்புகிறோம். தமிழ்ப்பேசும் மக்களிடையே ஒற்றுமை வெற்றிகரமாக ஏற்படவேண்டுமாயின் ஒரு விஷயம் மிகவும் முக்கியமானது அதாவது கட்சி நன்மையைவிட சமூகத்தின் நன்மையையே, பல கட்சிகளும், அதன் தலைவர்களும் முக்கியமாகக் கருதவேண்டும். மற்றக் கட்சிகளையும் தலைவர்களையும் கண்டிப்பதையும் குறை கூறுவதையும் கூடுமானவரை தவிர்த்து, சமூக நன்மையையே முக்கியமாகக் கருதி ஆக்க முறையில் காரியங்கள் செய்வது பெரிதும் விரும்பத்தக்கதாகும்.

# நடுநிலைமை நாடுகளின் தலைமைப் பதவி

## இந்தியாவுடன் இந்தோனேஷியா நடத்தும் போட்டி

ஆசியாவில் உள்ள நடுநிலை நாடுகளின் தலைமை நாடாக தற்போது இந்தியா விளங்கி வரும் இந்த நிலையில் இத்தலைமைப் பதவியை கைப்பற்ற இந்தோனேஷியா முயற்சித்து வருவதாக ஐ. நா. சபை வட்டாரத்தைச் சேர்ந்த ஆசிய நாட்டுத் தூதுவர்களிடையே கருத்து நிலவுகிறது.

இதை உறுதிப்படுத்துவதற்கான வகையில் பல அம்சங்கள் உள்ளதை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இந்தோனேஷியா, இந்தியாவுக்கு அடுத்தபடி பெரும் ஜனத்தொகையைக் கொண்டதாகும். பரப்பளவிலும் இது இந்தியாவுக்கு அடுத்தபடியாகஉள்ளது. ரஷியாவுடன் இந்தோனேஷியா சுமுகமான உறவு கொண்டுள்ளது. அத்தோடு சீனவுடன் இந்தோனேஷியா நெருங்கிய உறவு கொண்டுள்ளது.

கம்யூனிஸ்டல்லாத நாடுகளில் இந்தோனேஷியாதான் இடது சாரிக் கொள்கையைப் பின்பற்றும் நாடு என்று தென் கிழக்கு ஆசிய நாடு ஒன்றைச் சேர்ந்த தூதுவர் ஒருவர் சமீபத்தில் குறிப்பிட்டார்.

சர்வதேச விவகாரத்தில் சமீபகாலமாக இந்தோனேஷியா எடுத்துவரும் நடவடிக்கைகளான்து இந்தியாவை இக்கட்டான நிலையில் வைப்பதாகவே அமைந்துள்ளது என்பதை இங்குள்ள ஆசியப் பார்வையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இதற்கு உதாரணமாக அவர்கள் இரு விஷயங்களைச் சுட்டிக்காட்டினர்.

மலாயா, சிங்கப்பூர், புருணை, சரவாக், வடக்கு போர்னியோ ஆகியவற்றைக் கொண்ட மலேசிய அமைப்புத் திட்டத்துக்கு இந்தோனேஷியா முதலாவதாக எதிர்ப்புத் தெரிவித்தது. ஆனால் இந்தியாவோ மலேசியா திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. மலாயாவில் கணிசமான அளவுக்கு உள்ள இந்திய மைனரிடியினரும் இத்திட்டத்தை ஆதரிக்கின்றனர்.

இப்பகுதியில் சீன கம்யூனிஸ்டுகளின செல்வாக்கைத் தடுக்கும் நோக்கத்துடன் தான் மலேசியா அமைக்கப்படுகிறது. இவ்வாறாக இந்தப் பிரச்னையில் இந்தோனேஷியாவும், இந்தியாவும் மாறுபட்டகருத்தைக் கொண்டுள்ளன.

சர்வதேச ஒலிம்பிக்விளையாட்டுப் போட்டி இரண்டாவது விஷயமாகும். இந்தவிளையாட்டு ஸ்தாபனத்திலிருந்து இந்தோனேஷியா விலக்கப்பட்டுள்ளது இப்போது இந்த ஸ்தாபனத்துக்குப் போட்டியாக ஆபிரிக்க ஆசிய நாடுகளுக்கான விளையாட்டுஸ்தாபனத்தை அமைக்க இந்தோனேஷியா, முற்பட்டுள்ளது. "புதிதாக எழுந்துள்ள சக்திகளுக்கான விளையாட்டுப் போட்டி" என்று தனது யோசனைபற்றி இந்தோனேஷிய அதிபர் சுகர்னோ குறிப்பிட்டுள்ளார்.

"புதிதாக எழுந்துள்ள சக்திகள்" என்று இந்தோனேஷியா குறிப்பிடும் நாடுகள் புதிதாக சுதந்திரம்பெற்றநாடுகள் அல்ல இந்தோனேஷியா, கியூபா போல கம்யூனிஸ்டல்லாத இடது சாரி கொள்கைகளைக் கொண்ட நாடுகளேயாகும்.

இப்படியொரு போட்டி விளையாட்டு ஸ்தாபனத்தை அமைக்கும் எண்ணமானது ஜாகர்த்தாவில் நடந்த ஆசிய விளையாட்டுவிழாவில் இந்தியாவுக்கு எதிராக செயயப்பட்ட ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து ஏற்பட்டதாகும். மேலும் இந்த எண்ணம் இந்தியாவுக்கு எதிரான மனப்பான்மை கொண்டதாகும். இந்தோனேஷியா அமைக்க முற்பட்டுள்ள இந்த விளையாட்டு ஸ்தாபனத்தில் இந்தியா சேராது என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் சீனவோ இந்தோனேஷியாவின் யோசனைக்கு பூரண ஆதரவு அளிக்கிறது.

மேற்படி பிரச்னைகளை கவனிக்கும் போது நடுநிலை நாடுகளிடையே இந்தியாவுக்குள்ள செல்வாக்கைக் குறைக்கவே இந்தோனேஷியா முயற்சிப்பதாகக் கருதப்படுகிறது.

இந்தோனேஷியாவின் இந்த முயற்சியில் அவர்களுக்கு மற்றொரு சாதகமான அம்சமும் உள்ளது. உலகில் ஏராளமான முஸ்லிம் மக்களைக்கொண்ட நாடு இந்தோனேஷியாதான். எனவே இந்தோனேஷியா நடுநிலை நாடுகளின் தலைமை நாடாக ஆவதற்கு அரபு நாடுகளின் ஆதரவைப்பெற முயற்சிக்கும் என்றும் கருதப்படுகிறது.

# கோணேசராலய கும்பாபிஷேக நிகழ்ச்சி

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகட்கும் ஆவர்த்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக வைபவம் அடுத்த புதன்கிழமை காலை நடைபெறவிருக்கிறது. கும்பாபிஷேக விழாவையொட்டி மலர் ஒன்றினை வெளியிட ஆலய அறிவுறுத்தற் குழுவினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர். இம்மலரில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள அறிஞர்கள் எழுதிய ஆராய்ச்சிக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவ்வாலயத்தின் வரலாற்றை விளக்கும் "கோணேஸ்வரம்" என்னும் நூலும் வெளியிடப்பட்டுள்ளது. கும்பாபிஷேக விழாவையொட்டிய கிரியைகள் வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

வருகிற புதன்கிழமை காலை பத்துமணியளவில்கும்பாபிஷேகம்நடைபெறவிருக்கிறது.மாலையில் திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.

ஆலயத்தில்ஒவ்வொருநாளிரவும் சமயச் சொற்பொழிவுகளும், சங்கீதக் கச்சேரிகள், கதாப்பிரசங்கங்கள் என்பனவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

கும்பாபிஷேக விழா நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி அஞ்சல் செய்யும் எனத் தெரிகிறது. இலங்கையின் பல்வேறு இடங்களிலுமுள்ள அந்தண குருமார் இக்கும்பாபிஷேக விழாவில் கலந்துகொள்கின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை காலை: பூதசுத்தி, யாக பூஜை, விசேஷ பூஜை.

மாலையில் சிற்பி தூபிஸ்தாபனம், பூதசுத்தி, தேறுபூஜை, தீபஸ்தாபனம், யந்திரஸ்தாபனம்,பிம்பஸ்தாபனம்,அஷ்டபந்தனம், தைலாப்பியங்கம் (பகதர்கள் எண்ணெய்க் காப்பு) சிற்பி சம்பனைவா என்பன நிகழும்.

திங்கட்கிழமை காலை, புண்ணியாகம், விசேஷ சாந்தி, சாந்தி ஹோமம் முதலியன. மாலை: அனுக்கிரகக்கிரம பூதசுத்தி, யாக பூஜை, பிம்பசுத்தி.

செவ்வாய்க்கிழமை காலை: யாக பூஜை, ஹோமம். மாலை விசேஷ சந்தி, புண்ணியாகம், யாகபூஜை.

புதன்கிழமை காலை: யாக பூஜை, ஹோமம், பூர்ணாகுதி காலை 8-58-க்கு மேல் 10-34-க்குள் மகா கும்பாபிஷேகம், தசதர்சனம் முதலியன.

### ஐயாறன் எழுதுவது

நீதிபதி தனபாலசிங்கத்தார், யாழ்ப்பாணத்திலே பிரியாவிடைக் கூட்டமொன்றில் பேசுகையில், சிரிப்புப்பற்றி கூறினார். "சிரிப்பு சிறு வயது முதல் என் உடலோடு ஊறிவிட்டது. என் வேலை நேரத்திலும் சரி, மற்ற நேரத்திலும் சரி சிரித்த முகத்துடன்தான் இருப்பேன். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வில் அன்பாகப் பழகிச் சிரித்து மகிழ வேண்டும்" என்றார். ஆனால் நம்மில் எத்தனை பேரால் இப்படிச் சிரிக்க முடிகிறது?

"எ லாப் எடே, கீப்ஸ் த டாக்டர் அவே" (ஒரு நாளுக்கு ஒரு சிரிப்பு சிரிப்பதானது, டாக்டரை தூரத்தில் இருக்கச் செய்யும்) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. சிரிப்பது தேகசுகத்தை வளர்க்குமாம். நோய் வராதாம். சிரிப்பதற்குக் காசு பணம் செலவில்லை. என்றாலும் அந்த நீதிபதியைப்போல் நம்மால் சிரிக்க முடிகிறதா?

நம்மில் சிலர் எப்போதும் 'உம்" என்று முகத்தை வைத்துக்கொண்டிருக்கிறோம். மனது வெள்ளையாக, கள்ளங்கபடமின்றி இருப்பின் சிரிப்புப் பூத்துக்குலுங்குமென்பர். ஆனால் மனதிலே பொறாமையும் வேறு அழுக்குகளும் இருப்பதாயின் எவ்வளவு முயன்றாலும் சிரிக்க முடியுமா?

ஆனால் சிரித்துச் சிரித்துக் கழுத்தறுப்பவர்களும் உண்டு. அது வேறு விஷயம். அன்பு மேலீட்டால், மனம் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருக்கும். அந்த மன மகிழ்ச்சியிலிருந்து உண்மையாகப் பூக்கும் புன்னகை, யார் மனதைத்தான் கவர்ந்துவிடாது?

* * *

வல்வையிலே ஆனந்தனை வரவேற்றுப் பாராட்டியபோது நீதியரசர், ஸ்ரீஸ்கந்தராஜா தாம் கப்பலோட்டிய தமிழன் படத்தைப் பார்த்ததாயும், அது தம் மனதைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாயும், எல்லோரும் அதைப் பார்க்கவேண்டுமென்றும் சொன்னார்.

நீதியரசர் இப்படிக் கூறியதைக் கேட்டதும் அதைப் போய்ப் பார்த்தேன். முதல் நம்பர் படம். தேசபக்தர் சிதம்பரம்பிள்ளையாகவும் சிவாஜியின் உணர்ச்சி மிக்க நடிப்பு, ஒரு மரக்கட்டைக்கும் கூட, தேசபக்திஊட்டுவதாயுள்ளது. சுப்பையா அசல் பாரதியாக நடிக்கிறார். பாரத அன்னையை விடுவிக்கும் போராட்டத்தில் இந்தியப் புதல்வர்களின் தேசபக்தியையும், தியாக சக்தியையும் இதில் காணலாம். இப்பரம்பரையைச் சேர்ந்தவர்களை சீனர்கள் என்ன செய்யமுடியும்?.

இப்படத்தை மீண்டும் பார்க்கவேண்டுமென்று மனம்உந்துகிறது. நீங்கள் இதுவரை பார்க்காவிடில் இதை அவசியம் பார்க்கும்படி சிபார்சு செய்கிறேன்.

* * *

கரையோரப் பகுதிகளில் வசிப்பவர்களைப் பற்றி சாதித்திமிர் பிடித்த சிலர் 'மீன் பிடிப்போர்' என்று இளக்கமாகக் கூறுகின்றனரல்லவா? பார்லிமெண்டில்கூட, சதி வழக்கின் முதல் மூன்று நீதிபதிகளைப் பற்றி, பிலிப் இப்படிச் சொன்னார். இதற்குச் சரியான வாயாப்புக் கொடுத்தார்.ஆனந்தனைப் பாராட்டும் கூட்டத்தில் நீதியரசர். "கரை ஓரங்களில் வசிப்போர் கப்பலோட்டுவர், கடலை நீந்துவர். நாட்டையும் காப்பர்" என்று பலத்த கரகோஷங்களுக்கிடையே கூறினார். கரையோர வாசிகளின் மதிப்பையும் பெருமையையும் மிக உயர்த்திவிட்டார் ஆனந்தன் தன் சாதனையால். இனியும் அவ்வித சிறுமைப் பேச்சுக்கள் மீண்டும் தலைதூக்க முடியுமா?

* * *

சிறுபான்மை சமூகத்தைச்

(5ம் பககம் பார்கக)

## எங்களை அழைக்:::

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

உரிமை சம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

### தமிழ்மொழி விசேஷ மசோதா

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தமிழ்மொழி விசேஷ ஷரத்து மசோதாவின் பிரமாணங்களை ஏற்படுத்தப் போவதாக சிறிமா அரசாங்கம் கூறியிருந்தபோதிலும் இம்முயற்சியைப் பூர்த்திசெய்ய எந்த நடவடிக்கையும் செய்யப்படவில்லை.

சென்ற சத்தியாக்கிரகத்தின்போது தமிழ்மக்களின் மொழி உரிமைகள் சம்பந்தமாக இரண்டு குழுக்களை அரசாங்கம் நியமித்தது பொது மக்களுக்கு நினைவிருக்கும். அந்த இரண்டு குழுக்களும் தங்கள் அறிக்கைகளைச் சமர்ப்பித்துவிட்டபோதிலும் அந்த அறிக்கைகள்கூட இன்னும் வெளியிடப்படவில்லை.

### திடீர் அக்கறை மகிழ்ச்சி தருகிறது

இன்றுவரை தமிழ்மக்களின் உரிமைகள் விஷயத்தில் அசமந்தமாகவிருந்த பிரதமர் திருமதி சிறிமாவும் அரசாங்கமும் இப்பொழுது திடீரெனத் தமிழ்மக்கள் விஷயத்தில் அக்கறை காட்டுவது கண்டு நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழ்மொழி உபயோக விசேஷ மசோதா தமிழ் அரசுக்கட்சியின் அனுசரணையையோ ஆதரவையோ பெற்றதல்ல.

### தமிழரசுக்கட்சி துக்கப்படவில்லை

அடுத்த மாதம் தமது வாசஸ்தலத்தில் பிரதமர் கூட்டவிருக்கும் உத்தேச தமிழ்மொழி மகாநாட்டுக்குத் தமிழ் அரசுக்கட்சியினரை அழைக்காமல் விடுவதுபற்றி நாம் துக்கப்படவில்லை. ஆனால் மக்களின் பிரதிநிதிகள் தமிழ் அரசுக்கட்சியினர் என்பதை எவரும் மறுக்க முடியாது. மகாநாட்டுக்கு அழைக்கப்படவிருக்கும் வடக்கு, கிழக்கு மாகாணப் "பிரதிநிதிகள்" தனிப்பட்டவர்கள். தமிழ்ப்பேசும் மக்களின் பொதுஎண்ணத்தை இவர்கள் எப்படிப் பிரதிபலிக்கப்போகிறார்கள்?

எப்படியிருப்பினும்அரசாங்கம் தங்கள் தரப்பில் ஓர் தீர்மானத்தைச் செய்வதற்கு நாங்கள் இடையூறாக இருப்பதற்கில்லை.

ஆனால் சத்தியாக்கிரகக் காலத்தில் நாம் சமர்ப்பித்த குறைந்தபட்சக் கோரிக்கைகள்பற்றிக்கூட கவனம் செலுத்தாத பிரதமமந்திரியும் இந்த அரசாங்கமும்தானா அடுத்த மாதம் கூட்டும் மகாநாட்டில் தமிழ்மக்களுக்கு உரிமைகளை அள்ளிக் கொடுத்துவிடப் போகிறது?

என்றாலும் தமிழ்ப்பேசும் மக்களுடைய மொழி உரிமைகளைத் தீர்ப்பதற்கு இந்தமகாநாடு என்ன பலாபலன்களைத் தருகிறது என்பதை ஆவலோடு எதிர்பார்ப்போம்.

---

## ஐயாறன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தவரானதால் தான் ஆனந்தனுக்கு தகுந்த மரியாதை இல்லை என்று ஒரு கல்லூரி அதிபர்கூறினாராம். ஆனந்தனால் சிறுபான்மைச் சமூகத்தின் மதிப்பே உயர்ந்துவிட்டது. இது குறித்து தெற்கும் கூட பெருமைப்படுகிறதென்று கூறினார் ஒரு சிங்கள நண்பர். ஆனந்தனின் பெருமையை யார் குறைக்க முடியும்? அந்த வாலிபருக்குச் செய்யும் மரியாதை நமக்கும் நாட்டுக்கும் செய்துகொள்ளும் மரியாதையாகும்.

* * *

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப், பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சி, தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச், செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையுமன்றே.

—திருநாவுக்கரசர்.

---

## ஐயரின் சடலம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மில்லாதிருந்தது. முகம் சரியாகத் தெரியவில்லை. காயங்களைப் பூதக்கண்ணாடிமூலம் பார்வையிட்டேன்.

அரசாங்க ரசாயன பரிசோதகர் திரு. தியாகராசா கணேசன் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

28-1-63-ல் ஐந்து பார்சல்கள் கிடைத்தன. அவற்றுள் கத்தி, 3 சாக்குகள், 3 தலையணை, 1 போர்வை, மண்வெட்டி, வெள்ளை வேட்டி, 3 வெள்ளைத் தலையணை உறை, 1 சாரம், 1 சயிக்கிள், 1 வெள்ளை வேட்டி, 1 வெள்ளைப் பெனியன், கதவுத்துண்டு ஒன்றும் காணப்பட்டன.

சில பொருள்களில் மனித இரத்தம் காணப்படவில்லை. தலையணையுறை இரண்டிலும் மூன்றுசாக்கிலும் மனித இரத்தம் காணப்பட்டது. 'டோபி' குறி அடையாளம் உள்ள தலையணை உறைகளின் படங்கள் கோட்டில் சமர்ப்பித்துள்ளேன்.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்பிறிண்டனின் அழைப்பிற்கிணங்க, சம்பவம் நடந்த உருத்திரபுரம் கோவிலுக்கு 21-1-63-ல் சென்று பரிசோதனை நடத்தினேன். அப்பொழுது இன்ஸ்பெக்டர் பொன்னுத்துரை கூட இருந்தார்.

### வீட்டில் இரத்தக்கறை

காலஞ்சென்ற காசிலிங்க சர்மாவின் வீட்டில் கொலை நடந்திருக்கவேண்டும். அந்த வீடு இரு அறைகளும் ஒரு அடுப்படியும் கொண்டது. சுவரிலும் இரண்டாவது அறையின் கதவிலும் இரத்தக்கறைகள் காணப்பட்டது. அந்த இரத்தத் துளிகள் மனித இரத்தமெனக் கண்டுபிடிக்கப்பட்டது.

கோயில் ஐயர் கொலை வழக்கு ஏப்ரல் 3-ம் திகதிக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது.

---

## சமஷ்டிக்கட்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

கிழக்கிலங்கைப் பாதுகாப்பு முன்னணிக்கும் எவ்வித தொடர்புமில்லையென்றும் முன்னணியுடன் தம்மைத் தொடர்புபடுத்தி சில விஷமிகள் வதந்தியைப் பரப்பி வருகிறார்களென்றும் கூறினர்.

தமிழ் பேசும் மக்களுக்கு விமோசனம் பெற்றுத் தரக்கூடிய ஒரேயொரு கட்சி தமிழ் அரசுக் கட்சிதான் என்றும் நேரடி இயக்கத்தில் எல்லோரும் பங்கு கொள்ளவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

திரு. இராசமாணிக்கம் பேசுகையில் இன்றைய சூழ்நிலையில் தமிழ்ப் பேசும் மக்களின் உரிமைகளைப் பாராளுமன்றத்தின் மூலம் பெறமுடியாதென்பதைத் தமிழரசுக் கட்சி முன்னரே தெரிவித்து வந்துள்ளதெனறும் வெளியேதான் தீர்க்க முடியுமென்றும் அதற்கு நேரடி இயக்கத்தில் எல்லோரும் கலந்துகொள்ளவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

---

## பிரிட்டனின் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல்

லண்டன், மார்ச் 29

பிரிட்டிஷ்கடற்படைக்காகக் கட்டப்பட்டுள்ள முதல் அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் அடுத்த மாதம் 17-ம் திகதியன்று பிரிட்டனில் உள்ள பாரோ-இன்-பர்னஸ் கப்பல் கட்டும் துறையில் அதிகாரிகள் வசம் ஒப்புவிக்கப்படும். இதனை விக்கர்ஸ் ஆம்ஸ்ட்ரோங்ஸ் நிறுவனத்தினர் கட்டியுள்ளனர். இந்த நீர்மூழ்கிக் கப்பலை பிரிட்டிஷ் ராயல் கடற்படையினரிடம் ஒப்புவிக்கும் வைபவம் பின்னர் நடைபெறும்.

---

சரசாலைஇரட்டைக் கொலைவழக்கு

# "இரண்டு சூடுகள் சுடப்பட்டு இருக்கவேண்டும்"

## ஜி. ஜி. குறுக்கு விசாரணையில் ரசாயனப் பரிசோதகர் சாட்சியம்

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரிக் கோர்ட்டில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் நேற்றுக்காலை இரட்டைக்கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் அரசாங்க ரசாயன பரிசோதகர் திரு. சதாசிவம் சபாநாயகத்தை குறுக்கு விசாரணை செய்தார்.

1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 14-ந் திகதி இரவு சரசாலையைச் சேர்ந்த சரவணையையும் சின்னத்தம்பியையும் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகமுத்தையா கணபதிப்பிள்ளை, பொன்னையா சுப்பிரமணியம், ஆறுமுகம் பொன்னையா ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் திரு. ஜி ஜி. பொன்னம்பலம், திருவாளர்கள் கே. வி. எஸ். சண்முகநாதன், சுந்தரலிங்கம் ஆகியோரின் உதவியுடனும், திருவாளர்கள் வே. கனகசபை, எஸ். கே திரவியநாயகம், ஆர். டி. சிவகுரு செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

அரசாங்க ரசாயன பரிசோதகர் திரு. சதாசிவம் சபாநாயகம் சாட்சியமளித்தபோது கூறியதாவது: 6-3-63ல் ஒரு பார்சல் பரிசோதனை செய்வதற்காக கிடைத்தது. அதற்குள் ஒரு 'புஷ் சேட்', வெள்ளை வேட்டி, சன்னங்கள், வெள்ளைச்சாரம், ஒரு துவாய் மஞ்சல் கரை வேட்டி, ஒரு சால்வை, நாஷனல் சேட் காணப்பட்டது.

புஷ்சேட்டிலும், வெள்ளைச் சாரத்திலும், வேட்டியிலும், நாஷனல் சேட்டிலும் மனித இரத்தம் காணப்பட்டது. 3-3-63ல் இன்ஸ்பெக்டர் மாணிக்கத்துடன் சென்று சம்பவம் நடந்த இடத்தில் பரிசோதனை நடத்தினேன்.

சரவணையின் வீட்டு வெளிப் படலையை சுற்றியுள்ள பலகையில் 3 சன்ன அடையாளம் காணப்பட்டது. உரஞ்சப்பட்ட அடையாளங்களும் காணப்பட்டன. படலை பூட்டப்பட்டுள்ள தடியில் 4 சன்ன அடையாளங்களும் 2 உசரஞ்சப்பட்ட அடையாளங்களும் காணப்பட்டன. பக்கத்திலுள்ள பனைமரத்தடியில் வேறு ஒரு சன்ன அடையாளம் காணப்பட்டது. படலைப் பலகையில் இடது பக்கத்தில் 2 துவாரங்கள் காணப்பட்டன.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ரசாயன பரிசோதகரை குறுக்கு விசாரணை செய்தார்.

ஜி. ஜி: அடையாளங்கள் பலகையிலும் காணப்பட்டனவா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: பலகையை சுற்றியுள்ள மட்டையிலும் காணப்பட்டதா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: படலைத் தூணிலும் காணப்பட்டதா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: இடது பக்கத்தில் எத்தனை அடையாளங்கள்?

சாட்சி ஆறு அடையாளங்கள்.

ஜி. ஜி: வலது பக்கத்தில் எத்தனை?

சாட்சி: ஏழு அடையாளங்கள்.

ஜி. ஜி: ஏழு தனிப்பட்ட அடையாளங்கள்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஆதலால் இரண்டு சூடுகள் சுடப்பட்டிருக்கவேண்டும்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: எஸ் ஜி. தோட்டாவில் மிகப்பெரிய சன்னங்கள் உண்டு?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: அதற்கடுத்தது?

சாட்சி: ஸ்பெஸல் எஸ். ஜி. தோட்டாக்கள்.

ஜி. ஜி: தோட்டாக்களின் நிறை ஒன்று தான்?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: எஸ். ஜி.யில் எத்தனை சன்னங்கள்?

சாட்சி: ஒன்பது.

ஜி. ஜி: ஸ்பெசல்எஸ். ஜி.யில்

சாட்சி: பன்னிரண்டு.

ஜி. ஜி: 4 சன்னங்களில், ஒன்று மற்ற மூன்றிலும் பார்க்க அளவில் குறைந்திருக்கிறது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஆதலால் சன்னங்கள் வெவ்வேறு தோட்டாக்களிலிருந்து வந்துள்ளது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: படலையில் சன்னங்கள் ஒரே இடத்தில் குவிந்துள்ளதா?

சாட்சி: இல்லை. பரவியிருக்கிறது.

ஜி. ஜி: மரப்பலகையில் இடது பக்கத்தில் இரண்டு அடையாளம் காணப்பட்டது?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: உயரத்திலுள்ள அடையாளம் நிலத்திலிருந்து எவ்வளவு தூரம்?

சாட்சி: 3 அடி 7 அங்குலம்.

ஜி. ஜி: இரண்டாவது அடையாளம்? நிலத்திலிருந்து உயரம் என்ன?

சாட்சி: 3 அடி.

ஜி. ஜி: பனைமரக் கப்பில் அடையாளங்கள் உண்டா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: சூடு விழுந்தபோது படலை எந்த நிலையிலிருந்தது?

சாட்சி: திறந்திருக்கவேண்டும்.

ஜி. ஜி: பலகையில் துவாரங்கள் உண்டா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: இடதுபக்க பலகையின் நீளமென்ன?

சட்சி: அதைப் பற்றி குறிப்பு எடுக்கவில்லை.

ஜி. ஜி. சன்னங்கள் இருந்த மூன்று துவாரங்கள் காணப்பட்டனவா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: எவ்வளவு ஆளம்?

சாட்சி: 1/2 ஒன்று அங்கு

ஜி. ஜி: மற்றவைகள்?

சாட்சி: அளவு எடுக்கப்படவில்லை. அதே அளவாகத்தான் இருக்கவேண்டும்.

சட்டவைத்தியர் திரு. வைத்திலிங்கம்—பொலிஸ் கான்ஸ்ரபிள் பிரேமரத்ன சில்வாவும், பதிவாளர்ஜெயரத்ன விக்கிரமாவும் சாட்சியமளித்தனர்.

எதிரிகளின் சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமது தொகுப்புரையில் கூறியதாவது:

"தேவராசா சாட்சியத்தின் போது தனது தகப்பனார் சுடப்பட்டதென்று தாயார் சொன்னதாக கூறினார். கப்புக்குப் பின்னால் ஒளித்து நின்று தகப்பனார் சுடப்படும்போது பார்த்ததாகவும் கூறியுள்ளார். தகப்பனுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை எண்ணி அபாயக் குரல் எழுப்பவில்லை. சத்தம் போடவில்லை. அப்படிப்பட்டவர் சாட்சியாக்கப்பட்டுள்ளார். சரவணையின் மனைவி, சரசாலை ஆட்கள் சுட்டுவிட்டதாக கூறியுள்ளார். சுட்டவர்களைப்பற்றி விபரமாக ஒன்றும் கூறவில்லை.

சாட்சிகள் எல்லோரும் ஆயத்தப்படுத்தி கத்தியதைப்பற்றியும், 'ஐயோ' என்ற குரலைப் பற்றியும் கூறியுள்ளார்கள். சம்பவம் நடந்தது தைப்பொங்கல் தினத்தில் அன்று தங்கராசாவும் பெண்சாதியும் வந்திருக்கிறார்கள். அப்பொழுது சரவணையை எதற்காக சுடவேண்டும் அதுவும் தைப்பொங்கல் தினத்தில். ஏன் நடக்கவேண்டும். பெண்கடத்து வழக்கில் கணபதிப்பிள்ளை வழக்கறிஞர்களை வைத்து வழக்கு நடத்தினார். அவர் இப்படி நேரே சென்று சுடக்கூடியவரல்ல. அப்படியிருந்தால் முன்பே சுட்டிருக்கலாமல்லவா. 8 மாதமும் எதற்காக ஒன்றும் நடக்கவில்லை.

நாகமுத்து சூடுவிழுந்த சத்தத்தையும், கத்தியதையும் கேட்டதாக கூறியுள்ளார். நாகமுத்து வீட்டின் முன்னால் எதிரிகள் போய்த்திரும்பியதாக கூறியுள்ளார். அவர்கள் ஏன் அப்படி செய்தார்கள். அடையாள அணிவகுப்பு நடத்தினார்களா? நாகமுத்து யாரிடமும் தான் எதிரிகளை கண்டதாக கூறவில்லை. காரணம் என்ன? தனது ஆடு மாடுகளைப்பார்க்க தோட்டத்திற்கு போயிருக்கிறார் அதுவரை எதிரிகளைக்கண்டதாக கூறவில்லை. சம்பவம் நடந்த இடத்தில் மாஜிஸ்ரேட்டுக்கு நாகமுத்து வாக்கு மூல கொடுக்கவில்லை. அப்பொழுது அங்கே நின்றிருக்கிறார்.

தேவராசா கப்புக்குப் பின்னால் நின்று தகப்பன் சுடுபட்டதை கண்டதாகக் கூறினார். ஆனால் தாய்தேவராசாவிடம் நீ எங்கிருந்து வருகிறாய் என்று கேட்டுள்ளார்.

ரசாயனபரிசோதகரின் சாட்சியத்தின்படி உயரத்திலிருந்து சுடப்பட்டுள்ளது. அப்படியானால் தென்மரத்திலோ கூரையிலோ இருந்து சுட்டிருக்க வேண்டும். குண்டுகள் மேலேயிருந்து கீழ் நோக்கிச் சென்றுள்ளன.

தகப்பனார் முகம் குப்புற கீழே விழுந்திருக்கிறார். அவரை அப்படியே தூக்கி தலைமேலாக கிடத்தியதாக கூறினார்கள். இப்படி நடந்திருக்குமா? தலைவாசலுக்கு இழுத்து விட்டிருப்பார்கள். சுட்டால், சுடுபட்டவர் முன்னுக்கு விழுவார் என அவர்கள் நம்பினார்கள். அதனால் அப்படி சொன்னார்கள். சம்பவம் நடந்த இடத்தில் இரத்தத்துளி காணப்படவில்லை.

தகப்பன் சுடப்பட்டு விருந்திருக்கிறார். உயிர் இருக்கா? இல்லையா என்று அக்கறைப்படாமல், தெய்வானையும் மகனும், தென்னை மரத்தடிக்கு போய், சின்னத்தம்பியை பார்த்திருக்கிறார்களாம்? இது நடக்கக்கூடியதா?"

மாதிரிப்படம் வரைபவரும் படப்பிடிப்பாளரும் சாட்சியமளிக்கவிருப்பதால், ஏப்ரல் 5-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. ஏப்ரல் மாதம் 5-ம் திகதி தீர்ப்பளிக்கப்படும்.

---

நியூயோர்க், மார்ச் 29

நேற்றிரவு நியூயோர்க்கில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டுவிழாவில் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் பேசுகையில் சுவாமி விவேகானந்தர் மத சகிப்புத் தன்மையை மட்டுமன்றி, மற்றும் பல அம்சங்களிலும் சகிப்புத்தன்மையை அமெரிக்காவுக்குக் கொண்டு வந்தாரெனக் கூறினர்.

# இந்திய தோட்டத் தொழிலாளரை வெளியேற்ற வேண்டுமாம்

## மந்திரியிடம் ராஜரத்தினவின் தொழிற்சங்கம் கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

தொழிற்சங்கத்தை அமைக்கவோ தொழிற்சங்கத்தில் சேரவோ, அல்லது அரசியல் ஸ்தாபனத்தில் சேரவோ அரசியல், தொழிற் சங்க வேலைகளில் ஈடுபடவோ இலங்கையரல்லாதவர்களுக்குத் தடைவிதிக்கவேண்டுமென்று வெலிமடை எம். பி திரு. கே. எம். பி. ராஜரத்தின தலைமையில் தொழில் தேசியமய சேவைகள் மந்திரி திரு. எம். பி டி. சட் சிறிவர்த்தனவைப் பேட்டி கண்ட ஹெலபீமா 'வத்துசம காருசமித்திய என்ற தொழிற் சங்கம் கேட்டுக்கொண்டது.

இத்தூது கோஷ்டி மந்திரியிடம் ஆறு கோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது.

இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படும் பங்கீட்டு அரிசியையும் இலவச வைத்திய உதவி, இலவசக் கல்வி ஆகியவைகளையும் நிறுத்தவேண்டுமென்றும் தூதுகோஷ்டி கேட்டுக்கொண்டது.

தொழிற் கோர்ட், தொழிற் தகராறு மத்தியஸ்த விசாரணை மற்றும் ஆகியவைகளின் சகல அலுவல்களும் சிங்களத்தில் நடைபெற வேண்டுமென்றும் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் பெறும் வசதிகளும் சலுகைகளும் சிங்களத் தொழிலாளர்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்றும் இந்தியத் தொழிலாளரின் பிள்ளைகளுக்குத் தோட்டங்களில் வேலை கொடுக்கும் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட வேண்டுமென்றும் சர்வதேச மகாநாடுகளில் இந்தியத் தோட்டத் தொழிலாளரின் பிரதிநிதிகள் கலந்துகொள்வதைத் தடுக்க வேண்டுமென்றும் தூது கோஷ்டி கேட்டுக்கொண்டது.

திராவிட முன்னேற்றக் கழகம் அடியோடு அகற்றப்பட வேண்டுமென்றும் தோட்டங்களில் பொலிஸ் காவல் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் தூதுகோஷ்டி மந்திரியைக் கேட்டுக்கொண்டது.

இந்தியத் தோட்டத் தொழிலாளர்களை 'நாடுகடத்த வேண்டும்' என தூதுகோஷ்டி கேட்டுக்கொண்டது.

---

## வடமராட்சிப் பகுதி மெய்வல்லுனர் போட்டி

பருத்தித்துறை, வியாழன்

வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகட்கிடையே நடைபெறவிருக்கும் மெய்வல்லுனர் போட்டிகளை இம்முறை உடுப்பிட்டி. பருத்தித்துறைப் பகுதித் தலைமையாசிரியர் சங்கங்களே நடாத்துமென அறியப்படுகிறது.

வடமராட்சித் தமிழாசிரியர் சங்கம் தெரிவித்த முக்கூட்டுச் சபை யோசனையை உடுப்பிட்டித் தொகுதித் தலைமை ஆசிரியர் சங்கம் ஏற்கமறுத்து தலைமை ஆசிரியர் சங்கமே நடாத்த வேண்டுமென செய்துகொண்ட முடிபே இதற்குக் காரணம்எனக்கூறப்படுகிறது.

வடமராட்சித் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபை நேற்றய தினம்கூடியபோது இதுவிஷயமாக நீண்டநேர விவாதத்தின் பின் ஆசிரியர் சங்கம் சங்கரீதியில் ஒத்துழைப்பதில்லை யென முடிவுசெய்திருப்பதாகத் தெரியவருகிறது.

உப-தலைவர் திரு. ஜே. கே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற நிர்வாகசபையில் பாடசாலைகட்கிடையே பேச்சுப் போட்டியை இரண்டாவது தவணையில் வைப்பதெனவும் விடுமுறைக்கழக விஷயம் பின்னா ஆலோசிப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

---

# 'இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்துக'

## மந்திரிசபை உபகமிட்டி அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

அலங்காரப் பொருட்கள் அல்லாத பொருள்களில் விதிக்கப்பட்டிருக்கும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்துமாறு ஊழியர் வேலைநீக்கங்களைத் தடுப்பது சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட மந்திரிசபை உப கமிட்டி இறக்குமதிக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அறிவித்துள்ளது.

உணவுப் பொருள்கள், துணிவகைகள், அத்தியாவசிய யந்திர உதிரிப் பாகங்கள் ஆகியவை மீது விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்துமாறே கமிட்டி தெரிவித்துள்ளது.

இலங்கை முதலாளிமார் சம்மேளனம், இலங்கை வர்த்தக யூனியன் ஆகியவை வேலைநீக்க நிலைமை சம்பந்தமாகத் தெரிவித்திருந்த குறைபாடுகளைத் தொடர்ந்தே மந்திரிசபை உப கமிட்டி இவ்வித முடிவு செய்துள்ளது.

அத்தியாவசிய பொருள்களின் இறக்குமதிக் கட்டுப்பாட்டு விதிகளைத் தளர்த்தாவிடில் பல வர்த்தக ஸ்தாபனங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படவேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படும் என இந்தச் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

---

## இருவர் தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, வெள்ளி

புத்தக வெளியீட்டுச் சபையில் பாடசாலைப் பாடப் புத்தகங்கள் பரிசீலனை செய்யும் பகுதியில் கடமையாற்றிவந்த இருவரை கல்வி மந்திரி ஜனுப் பதியுதீன் மாமூத் தற்காலிக வேலைநீக்கம் செய்துள்ளார்.

பாடசாலைகளில் பயிற்றுவிப்பதற்கான சரித்திரப் புத்தகமொன்றை நன்கு பரிசீலனை செய்யாமலே அதைப் பாடசாலைகளில் பயிற்றுவிக்க அனுமதித்ததாலேயே இவர்களிருவரும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி' ஸில்வா எழுதி பின்னர் பதிப்புரிமை வேறொருவரிடம் கொடுக்கப்பட்ட சரித்திரப் புத்தகம் மீண்டும் ஒருமுறை புதிப்பிக்கப்பட்டு எழுதப்பட்டது. வெளியிடப்பட்ட இந்தப் புதுப் புத்தகத்தில் அரசாங்கத்தை குறைகூறும் அத்தியாயம் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது.

இதனல் மந்திரி இப்புத்தகத்தைத் தடைசெய்தார் அரசாங்கத்தைக் குறைகூறும் பகுதியை நீக்கிவிட புத்தக வெளியீட்டாளர்கள் சம்மதம் தெரிவித்ததன் பேரில் தடை நீக்கப்பட்டுள்ளது.

---

# "யூதர் போல் தமிழினமும் வைராக்கியம் பெறவேண்டும்"

## சாவகச்சேரி எம். பி. பேச்சு

சாவகச்சேரி, வியாழன்

"தற்போதைய சூழ்நிலையில் அரசியல் பேசவேண்டி ஏற்படுகிறது. இற்றைக்குப் பல்லாண்டுகளுக்கு முன் யூத சாதியாரை அழித்தொழிப்பதற்காக அவர்கள் இருந்த இடம் விட்டு ஓடச் செய்தனர். அவர்கள் தங்கள் இனம், பண்பாடு ஆகியவற்றைக காக்கவும், தங்கள் சுயாதீனத்தை நிலைநாட்டவும் மன வைராக்கியத்துடன் பணியாற்றி வந்ததன் பயனாக இன்று சுயாதீன நாடாகவும் தனக்கோர் கொடியின் கீழ் அட்சிபுரிவதையும் கண்ணரைக் காணக்கிடக்கின்றது. ஆகவே தமிழினமும் சுதந்திரத்தைப் பெற மன வைராக்கியத்துடன் பணியாற்றவேண்டும்."

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தென்மராட்சி பலநோக்குக் கூட்டுறவுச் சமாசப் பொறுப்பில் நியாயவிலைக் கடையைத் திறந்துவைத்துப் பேசும்போது கூறினர்.

சமாஜத் தலைவர் திரு. எம். பரராசசிங்கம் தலைமை வகித்து உரையாற்றியதாவது:

"உணவுப் பொருட்களும், முக்கியமான தேவைக்குரிய பொருட்களும் மக்களுக்குக் கிடைப்பது அருமையாகிவிட்டது. பொருட்களின விலையும் உச்ச விலைக்கேறிவிட்டது. நிதானமான நியாயமான விலையில் பெற முடியாமலிருக்கிறது. ஆகவே இப்படியான கடைகள் நமக்கு அவசியம். இதனல் பொதுமக்கள் சிரமப்படாமல் கூடுதல் விலை கொடாமல் சௌகரியமாய்ப் பொருட்களைப் பெறமுடியும்".

---

## கோணேசராலய இன்றைய நிகழ்ச்சி

### (30-3-63 சனி)

திருக்கோணமலை, வியாழன்

திருக்கோணமலை கோணநாயகராலயத்தில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சி விபரம் பின்வருமாறு:

தலைவர்: பண்டிதர் ஐ. சரவணமுத்து.

வரவேற்புரை: திரு. ரி. நடராசா (ஆசிரியர்).

சொற்பொழிவு: பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பிரம்மஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள், திரு. நா. முத்தையா (ஆத்மஜோதி ஆசிரியர்), பண்டிதர் இ. வயிரமுத்து.

இசைக் கச்சேரி: செல்வி ச சங்கரப்பிள்ளை, செல்வி ந. திருமகள் தேவி.

நன்றியுரை: திரு. த. இரத்தினவேல்.

---

## இலங்கையில் திராட்சை உற்பத்தி

கொழும்பு, வள்ளி

இலங்கையில் பெருந்தொகையாகத் திராட்சையை உற்பத்தி செய்ய விவசாய அமைச்சு நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

திராட்சை இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் திராட்சைக்கு நல்ல எதிர்காலம் இருக்குமென விவசாய மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலும் இலங்கையில் வேறு சில இடங்களிலும் இசபெல்லா என்றவகைத் திராட்சை உற்பத்தி செய்யப்படுவதாயும் இந்த இடங்களில் விரிவான முறையில் திராட்சை உற்பத்தியைச் செய்ய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமெனவும் மந்திரி தெரிவித்தார்.

---

## ஆசிரியை இடமாற்றம்

பருத்தித்துறை, வியாழன்

வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி எஸ். ஏ. இராசசிங்கம் மே மாதம் முதல் புலோலி மெதடிஸ்த அரசினர் கனிஷ்டப் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனத்தெரியவருகிறது.

திக்கம் சைவவித்தியாசாலை தலைமை ஆசிரியர் பண்டிதர் திரு. க. மயில்வாகனம் துன்னலை வடக்கு காசிநாதர் வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். காசிநாதர் வித்தியாலய தலைமை ஆசிரியர் திரு. க. நல்லதம்பி ஏப்ரல் மாதத்தில் இளைப்பாறவிருப்பதாக அறியப்படுகிறது.

---

## மீண்டும் மழை

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பில் மீண்டும் திடீரென இடிமுழக்கத்துடன் பெரும் மழை பெய்தது!

காலம் தவறிப்பெய்யும் இம் மழையினல் விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் மட்டுநகரில் இவ்வார இறுதியில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள பல முக்கிய நிகழ்ச்சிகள் மழை நீடிக்குமானல் ரத்தாகலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஒரே இரவில் பல வீடுகளில் திருட்டு

தொல்புரம், வெள்ளி

ஒரே இரவில் பல வீடுகளில் திருட்டு நடைபெற்ற சம்பவம் தொல்புரத்தில் நடைபெற்றுள்ளது.

தொல்புரத்தைச் சேர்ந்த ஆயுள்வேத வைத்தியர் திரு. அ. கந்தப்பு வீட்டில் திருடர் கோஷ்டியொன்று நுழைந்து தாலிக்கொடியைத் திருடிச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வீட்டில் 40 ரூபாவும், மற்றொரு வீட்டில் 74 ரூபாவும் வேறொரு வீட்டில் சங்கிலியும் காப்பும், அதேயிரவில் திருடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. திருடர்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. பொலிஸார் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

---

## ஜூலை 25-ல் வரவு செலவுத் திட்டம்

கொழும்பு, வெள்ளி

ஜூலை 25-ம் திகதி வரவு செலவுத் திட்டம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல வரவு செலவுத்திட்ட உரையை சிங்களத்தில் நிகழ்த்துவார் எனத் தெரிகிறது.

---

## ஆலய உற்சவம்

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவு கிழக்கு கலட்டி, ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 30-ந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகிறது.

---

## சதி சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதி கோருகிறார்

கொழும்பு, வெவள்ளி

சதி சந்தேகநபர்களுள் பத்தாவது எதிரியான திரு. நிமால் ஸ்டான்லி ஜெயக்கொடியை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு திரு. எப். ஜே டி' சேரம் சப்ரீம் கோர்ட்டில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இதுபற்றி அட்டோர்ணி ஜெனரலுக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சதியில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள 24 நபர்களுள் ஒருவரான திரு. ஜயக்கொடி ஜூன் மாதம் 3-ம் திகதி விசாரணை ஆரம்பிக்கப்படும்போது விசாரணை செய்யப்பட விருக்கிறர்.

---

## உலக சாதனையாகப் பதிவு செய்வதில் கஷ்டம்

யாழ்ப்பாணம், சனி

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நீச்சல் வீரர் ஆனந்தனின் சாதனையை உலக சாதனைகளில் பதிவு செய்வதில் சிறிது கஷ்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பாக்கு நீரிணையை நீந்திக் கடக்க கடவில் ஆனந்தன் இறங்கியபோது உடனிருந்த மூன்று பொறுப்புள்ள அதிகாரிகள் மீண்டும் ஆனந்தன் கரையேறும்போது தாமும் உடனிருந்ததாக உறுதிப்படுத்த வேண்டும். இவ்விஷயத்தில் தான் சிறிது கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

ஆனந்தனுடன் கூடச் சென்றவர்கள் நடுக் கடலுக்கு அப்பால் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தமையினல், ஆனந்தன் கரையைச் சேர்ந்தபோது கூடச் சென்றவர்களில் பொறுப்புள்ள அதிகாரிகள் எவருமிருக்கவில்லை.

---

## கோழி நோய் தடுப்பு

தொல்புரம், வெள்ளி

தொல்புரம் மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் கோழிகளுக்கு நோய் வராமல் தடுப்பு ஊசி போடப்பட்டது. சுமார் 100 கோழிகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

---

## கரவெட்டி பட்டினசபை

உடுப்பிட்டி, வெள்ளி

கட்டைவேலி கிராமசபை கரவெட்டி பட்டின சபையாகப் பெயர் பெறவிருக்கிறது. கட்டைவேலி கிராம சபையின் மாதாந்தக் கூட்டம் திரு. ஆர். சச்சிதானந்தம் தலைமையில் நடைபெற்றது. கட்டைவேலி கிராமசபை பட்டினசபை அந்தஸ்துப் பெறுவதால் அதனை கரவெட்டி பட்டினசபை என்று அழைக்க முடிவு செய்யப்பட்டது.

அரசினரால் தற்போது நியமிக்கப்பட்டுள்ள சிங்கள ஆயுள் வேத வைத்தியரை மாற்றி தமிழ் தெரிந்த ஆயுள் வேத வைத்தியரை நியமிக்கும்படி உள்ளூராட்சி ஆணையாளரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எட்டு அங்கத்தவர்கள் கூட்டத்திற்கு சமுகமளிக்கவில்லை.

---

## கிராமசேவகர் பதவியேற்பு

யாழ்ப்பாணம், சனி

கிராம சேவகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளவர்கள் மே மாதம் முதலாம் திகதியிலிருந்து பதவியேற்கவிருக்கிறார்கள்.

கிராம சேவகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிபெறுபவர்களுக்கு அவர்கள் கடமையாற்றவேண்டிய இடங்கள் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்கள் தமக்குவேண்டிய வசதிகளைச் செய்யவே முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

---

## பச்சை அரிசி

புங்குடுதீவு, வியாழன்

புங்குடுதீவில் ஒன்றரை மாதங்களாகப் பச்சைஅரிசியே பங்கீட்டரிசியாக விநியோகிக்கப்பட்டுவருகின்றது. இதனல் மக்கள் பெரிதும் அதிருப்தி அடைந்து வருவதுடன், வயிற்றுளைவுபோன்ற நோய்களுக்கு இலக்காகிவருவதாகவும் செய்தி கிடைத்திருக்கின்றது.

# அமர பாரதி பரீட்சாஸமிதி

## சம்ஸ்கிருத பரீட்சை முடிவுகள்

### 47 பேர் சித்திபெற்றனர்

புத்தூர், வெள்ளி

சென்ற மாதம் 17-ம் தேதி நடந்த அமரபாரதி பரீக்ஷா ஸமிதி (சென்னை)யின் சம்ஸ்கிருதப் பரீட்சை முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. சம்ஸ்கிருத விஸ்வ பரிஷத் புத்தூர்க் கேந்திரத்தின் ஆதரவில் ஆண்டில் இருமுறை இங்கு நடத்தப்படும் இப் பரீட்சைகள், சென்ற மாதம் யாழ்ப்பாணம், சுன்னுகம், நீர்வேலி, திருக்கேதீஸ்வரம், கொழும்பு ஆகிய ஐந்து இடங்களில் நடத்தப்பட்டன. ஸமிதியின் ஆறு பரீட்சைகளில் முதல் மூன்று பரீட்சைகளுக்கும் 108 பரீட்சார்த்திகள் விண்ணப்பம் அனுப்பியிருந்தும் பல வசதியீனங்களால் 51 பரீட்சார்த்திகளே பரீட்சை எழுதினர். இவர்களுள் நால்வர் தவிர ஏனைய 47 பேரும் சித்திபெற்றிருக்கிறார்கள்.

முதற் பரீட்சையில் உயர்த சித்தியில் முதலிடம்பெற்ற ஒருவர் தங்கப் பதக்கமும் ஒருவர் வெள்ளிப்பதக்கமும், இரண்டாவது பரீட்சையில் மூவரும், மூன்ருவது பரீட்சையில் ஒருவரும் வெள்ளிப்பதக்கங்களும் பரிசுகளாகப் பெறுகிறார்கள். உயர்தரசித்தி பெற்றும் பதக்கப் பரிசுபெற முடியாத 9 பரீட்சார்த்திகள் பாராட்டுப் பரிசு பெறுகிறார்கள். இன்னும் மூன்று வெள்ளிப் பதக்கப் பரிசுபெறும் வாய்ப்பிருந்தும் பரிசுபெறுதற்குரிய தரத்தை அடையாத காரணத்தால் சுன்னுகம், யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மூன்றிடங்களில் முதற் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் குறித்த மூன்று பரிசுகளையும்பெற முடியவில்லை.

தமிழாசிரியர் சங்க ஆதரவில் மல்லாகத்தில் நடத்தப்படும் உயர்தர வகுப்புகளிலும், திருக்கேதீஸ்வரத்திலுள்ள சிவானந்த குருகுலத்திலும் நீர்வேலி, சுன்னுகம், கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள வேதாகம சம்ஸ்கிருத பாடசாலைகளிலும் பயிலும் மாணவர்களும், கொழும்பு இந்து வாலிபர் சங்கம், திவ்விய ஜீவன சங்கம் ஆகியவற்றின் அங்கத்தவர்களும், வெளிப் பரீட்சார்த்திகள் சிலரும் இப் பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியடைந்திருக்கிறார்கள்.

பரீட்சை முடிந்து முடிவுகளும் வெளிவந்துவிட்டனவாயினும் 108 பரீட்சார்த்திகளின் கட்டணப் பணம், நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடு காரணமாக இன்னும் ஸமிதிக்கு அனுப்பப்படாதிருப்பது குறிப்பிடத்தக்கது. கட்டணப் பணத்தை இங்கிருந்து அனுப்புவதிலும், பரிசுப் பதக்கங்களை இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்வதிலுமுள்ள தடைகளின் காரணமாக ஸமிதிக்கு இலங்கையில் ஒரு கிளையை வருகிற மாதத்தில் நிறுவி அதன்மூலம் பரீட்சைக் கட்டணத்தை இங்கேயே வைத்திருந்து பரிசுகளுக்கு உபயோகிப்பதற்கும், இந் நாட்டுக்கேற்ற வேறு பரீட்சைகளையும் நடத்தவும் முயற்சிகள் நடக்கின்றன.

சென்ற ஆவணி மாதத்தில் நடந்த ஸமிதிப் பரீட்சைகளில் தேறியவர்களுக்கும், பம்பாய் பாரதிய வித்யபவன பரீட்சைகளில் தேறியவர்களுக்குமுரிய பரிசுகளும் பத்திரங்களும் 7-4-63ல் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் வால்மீகி தின விழாவில் வழங்கப்படும்.

### பரிசுபெறுபவர் விபரம்

#### பிராதமிக தங்கப்பதக்கம்

ஆ. இராமநாதசர்மா, வேதாகம பாடசாலை, நீர்வேலி.

#### வெள்ளிப் பதக்கம்

அ. ப. பாலசுப்பிரமணிய சர்மா சிவானந்த குருகுலம், திருக்கேதீஸ்வரம்.

#### பாராட்டுப் பரிசுகள்

ந. பாலசுப்பிரமணிய சர்மா, சிவானந்த குருகுலம். சி. ஜோதீந்திர சர்ம சிவானந்த குருகுலம், ச. கந்தராஜ சர்மா வேதாகம பாடசாலை நீர்வேலி.

#### மதயமா வெள்ளிப் பதக்கம்

சி. பொன்மணி தமிழாசிரியர் சங்க வகுப்பு மல்லாகம், ரா. சந்திரசேகரசர்மா வேதாகம பாடசாலை கொழும்பு, செல்வி சுகுணு கந்தையா சுப்பிரமணியசனசமூக நிலையம் நீர்வேலி.

#### பாராட்டுப் பரிசுகள்

ஆ. சாவித்திரியம்மாள் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம், ம. நமசிவாயம் இந்துவாலிபர் சங்கம் கொழும்பு, சி. குணரத்தினம் தமிழாசிரியர் சங்கவகுப்பு மல்லாகம், செல்வி பாயிஷா அபூசாலி சோனகதெரு யாழ்ப்பாணம், சி. லோகேஸ்வரி ஸ்கந்தவரோதயக்கல்லூரி சுன்னுகம், ந. சிவசண்முகமூர்த்தி வேதாகம பாடசாலை சுன்னுகம்.

#### பிரவேச வெள்ளிப் பதக்கம்

ஆ. கோமதியம்மாள் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

### சித்தி பெற்ற ஏனையோரின் விபரம்

**1. பிராதமிகா**

முதற் பிரிவு:

ந. கணேசசர்மா, ந. மகேசசர்மா.

இரண்டாம் பிரிவு:

ச. வரதராஜசர்மா, ச. திருச்செல்வம், வை. கனகசபாபதி சர்மா, வை.கார்த்திகேயசர்மா, இ. ஆனந்தநடராஜா, பா. வேதாரண்யேஸவரசர்மா, க. லக்ஷ்மணசர்மா, ரா. பாலகிருஷ்ணசர்மா.

மூன்ரும் பிரிவு:

இ. விஸ்வேஸவரசர்மா, சு. ஹரிஹரகணபதிசர்மா, ப. முத்துக்குமாரஸ்வாமி சர்மா, வ. தியாகராஜா, ஆர். வடிவேல், பி. டி. எஸ. மொஹமத், ச. பசுபதீஸ்வரசர்மா, இ. சூர்ய பிரபாகரன், சோ. கனகசபேசன், கு. வைத்தியநாதசர்மா, கு. ஜெகதீஸ்வரன், கு. நித்தியானந்தசர்மா, ப. சிவானந்த சர்மா.

**2 மத்யமா**

முதற் பிரிவு:

ஆ. கமலநாதன், கா. யோகேஸ்வரி, த. அன்னலட்சுமி,

இரண்டாம் பிரிவு:

த. விஜயலட்சுமி, க. கிருஷ்ணசாமி

மூன்ரும் பிரிவு:

த. இராசரத்தினம், சீ. சிவசித்திரமணி.

**3 பிரவேசா**

இரண்டாம் பிரிவு:

க. சண்முகலிங்கம், வே. பத்மாவதி.

---

## ஆனந்தனுக்கு கனகபுரம் வரவேற்பு

கனகபுரம், வியாழன்

பாக்குநீரிணையை நீந்திக் கடந்த வீரர் இளைஞன் திரு. ஆனந்தனுக்கு கனகபுரம் கிராம முன்னேற்றச்சங்கம் ஒரு வரவேற்பளிப்பதென சங்க மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

#### சனி 30-3-63

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தியாகராஜவிழா அஞ்சல்.

இரவு 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 ஈ. அம்பிகைபாகன் — பேச்சு, 9-30 தியாகராஜவிழா அஞ்சல்.

#### ஞாயிறு 31-3-63

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நிகழ்ச்சி, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 தமிழ் மூலம் சிங்களம், 8-30 ஞானஞ்சலி, 9-00 முஸ்லிம் சமயப்பாடசாலை, 9-30 திரைஇசை, 10-30 தியாகராஜ விழா அஞ்சல். 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 தியாகராஜாவிழ அஞ்சல், 6-15 கோவில் அஞ்சல்.

இரவு 7-15 தியாகராஜ விழா அஞ்சல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-45 'வாடகைக்கு விடப்படும்' — நாடகம், 10-15 தேர்ந்தஇசை.

### திருச்சி

#### சனி 30-3-63

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 தஞ்சாவூர் ஆர் நடராஜன் — வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-30 குரலிசை, 2-40 தஞ்சாவூர் ஆர். நடராஜன் — வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 வாத்தியஇசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'உலகம் வாழ்வதற்கே' — நாடகம், 8-00 திரைப்படஇசை, 8-40 இடைவேளை, 8-45 தேசபக்திப் பாடல்கள், 9-15 இசைக்கோவை. 9-30 சாத்தூர் ஏ. ஜி. சுப்பிரமணியம் — பாட்டு.

#### ஞாயிறு 31-3-63

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குப்புகள், 7-35 இசைக்கோவை, 8-15 டி. வி. ரத்னம் — பாட்டு.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி, 1-00 மணிமலர், 1-50 வாத்திய இசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 வைரமங்கலம் லக்ஷ்மி நாராயணன்— பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-30 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கொட்டு முரசே — சித்திரம், 7-45 என். வீராஸ்வாமி — கிளாரினெட், 9-15 தேசபக்திப்பாடல்கள், 9-45 ஆகாசவாணி ஒலிப்பதிவுகள்.


மாமைட் எனக்கும் என் குடும்பத்துக்கும் நற்சுகமும் பெலனும் தருகிறது.



நாம் யாவரும் நன்ருய் சாப்பிடுகிறோம் அதிக சக்தியும் பெலனும் உள்ளவர்களாய் இருக்கிறோம். பலத்திற்கும்வீர்யத்திற்கும் உங்கள் தினசரி ஆகாரத்தில் ஒருபாகமாக நீங்கள் மாமைட் தினசரி அருந்திவர வேண்டும்.

மாமைட் வெந்நீரில் அருந்தப்படலாம். உங்களுக்கு விருப்பமாளுல் கொஞ்சம் எலுமிச்சம்பழச்சாறும் சேர்த்து அல்லது தாளித்துச் சாப்பிடலாம். மாமைட்டை ரொட்டியிலோ அல்லது பிஸ்கட்டிலோ பட்டரோடு அல்லது பட்டரின்றி இலேசாகத் தடவி சாப்பிடலாம். மாமைட்டை சூப், கறி முதலியவற்றில் சேர்க்கும்பொழுது அதிகப்படியான ருசியை மட்டுமின்றி உங்கள் தினசரி ஆகாரத்தைச் சமைக்கும்பொழுது தேவையான விட்டமின் பி சத்துக்களையும் கூட்டிக் கொள்கிறீர்கள்!

மாமைட் பி வர்க்க விட்டமின்களை ஏராளமாகக் கொண்ட ஓர் காய்கறி ஆகாரம்.




மாமைட்

# நேரடி இயக்கம் பற்றி அடுத்தமாதம் முடிவு

மட்டக்களப்பு, வெள்ளி

தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் அடுத்த மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் வவுனியாவில் கூடவிருக்கிறது. இக்கூட்டத்தில்தான் கட்சியின் நேரடி நடவடிக்கை பற்றி இறுதிமுடிவு செய்யப்படுமெனக் கூறப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் திரு. செல்வநாயகம், திரு. அமிர்தலிங்கம், மூதூர் முதலாவது எம். பி. ஜனுப் எம். ஈ. ச். முகமது அலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

பாட்டாளிபுரத்திலுள்ள கட்சிக காரியாலயத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. செயற்குழுக் கூட்டத்தில் திரு. எஸ். எம். இராசமாணிக்கம், திரு. செ. இராசதுரை, திரு. பொ. மாணிக்கவாசகர், அறப்போர் அணித்தலைவர் திரு. ஆர். டபிளியூ. வி. அரியநாயகம், செனட்டர் மாணிக்கம் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

## காரைநகர் சிவன் கோயில் கொடியேற்ற விழா

காரைநகர், வெள்ளி

காரைநகர் சிவன் கோயிலில் பங்குனி மாத உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது. 9-ம் நாளாகிய 6-4-63 சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் அடுத்த நாளாகிய 8-4-63 திங்கட்கிழமை கலியாண உற்சவமாகி பூங்காவனமும் நடைபெறவிருக்கிறது.

## கொலை முயற்சி வழக்கு

### சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தப்பட்டது

மாவிட்டபுரம், வெள்ளி

ஏழாலையைச் சேர்ந்த வல்லிபுரம் நடராசா, வல்லிபுரம் செல்லையா, செல்லப்பா செல்லத்துரை, செல்லப்பா கணபதிப்பிள்ளை ஆகிய நால்வரும் சட்டவிரோதமாகப் பயங்கர ஆயுதங்களுடன் கூடி வீமன்காமத்தைச் சேர்ந்த நாராயண பிள்ளை வைரமுத்துவைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், வீமன்காமத்தைச் சேர்ந்த கதிரேசு தங்கராசாவுக்குக் காயமுண்டுபண்ணியதாகவும், மேலும் மூன்று குற்றச்சாட்டுகளுடன் காங்கேசன்துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. காங்கேசன்துறைப் பொலிசைச் சேர்ந்த திருவாளர்கள் வான்ஜேயின், ஜயசுந்தரா ஆகியோர் சாட்சியமளித்தபின் நீதிபதி எதிரிகளுக்குக் குற்றச்சாட்டை வாசித்துக்காட்டி குற்றவாளிகளா இல்லையா என்று கேட்டார். எதிரிகள் தாம் குற்றவாளிகள் என்றனர். நீதிபதி எதிரிகளைச் சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு நிற்க உத்தரவிட்டு, ஆங்கிலம் பேசும் ஜூரிகள் முன் எதிரிகள் கைவிரல் அடையாளமும் எடுக்க உத்தரவிட்டார். எதிரிகளின் பழைய பிணையை மாற்றி புதுப்பிணையில் செல்வதற்காக அடுத்த மாதம் 11-ம் திகதி கோர்ட்டில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார். காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கந்தையாவின் உதவியுடன் திரு. எஸ். நடராசாவின் அனுசரணையுடன் திரு. ஆர். கண்ணுததுரை வழக்கை நடத்தினர்.

எதிரிகள் சார்பில் திரு. ரி. தம்பிரத்தினத்தின் உதவியுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர்.

## கொழும்பு மேயர் வரமாட்டார்

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு நகரமேயர் திரு. வி. ஏ. சுகததாசா இன்று யாழ்ப்பாணம் வரமாட்டாரென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து இன்று நண்பகல் கொழும்பு மாநகர சபை உதைபந்தாட்டக் கோஷ்டி யாழ்ப்பாணம் வருகிறது. இக் கோஷ்டியினர் யாழ்ப்பாணம் மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டியினருடன் இன்று மாலை யாழ்ப்பாணம் பொலிஸ் மைதானத்தில் உதைபந்தாட்டப் போட்டியில் கலந்துகொள்வர்.

மாலை 4-30 மணிக்கு இப்போட்டி நடைபெறவிருக்கிறது.

## நரசிம்மன்

நியூயோர்க், மார்ச் 29

ஐ. நா. உதவி பிரதம காரியதரிசி திரு. நரசிம்மன், உத்தேச மலேசியநாடுகளுக்கும், இந்தோனேஷிய, பிலிப்பைன்ஸ் ஆகியநாடுகளுக்கும் 2- வது முறையாக விஜயம் செய்யவிருக்கிருர்.

## காமராஜர் கன்னத்தில் அறைந்தார்?

சென்னை மார்ச் 29

திருச்சியில் நடைபெற்ற பொற்கொல்லர் ஊர்வலத்தின்போது, தாம் ஒருவரது கன்னத்தில் அறைந்ததாக பலவிடங்களிலும் கூறப்பட்டதில் உண்மையல்ல என தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு காமராஜர் சட்டசபையில் அறிவித்தார். எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் இதுபற்றி விளக்கம் கோரியபோதே அவர் இவ்வாறு கூறினர்.

## ரிமாண்டில் வைக்க உத்தரவு

மாவிட்டபுரம், வெள்ளி

அச்சுவேலியைச் சேர்ந்த செல்லமுத்து நடராசா என்பவரின் வீட்டை உடைத்து ரூபா 300 பெறுமதியான பொருட்களையும் பணத்தையும் திருடியதாக மட்டக்களப்பைச் சேர்ந்த சைமன் வியனகோசா அல்லது முகமது சுல்தான் லத்தீப் என்பவர் மீது காங்கேசன்துறைப் பொலிஸாரால் குற்றஞ்சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்தபோது எதிரி தான் குற்றவாளி என்றுர். நீதிபதி எதிரியின் கைவிரல் அடையாளம் எடுக்க உத்தரவிட்டு தீர்ப்பு கூறுவதற்காக வழக்கை அடுத்த மாதம் 4-ந் திகதிக்கு ஒத்திவைத்து அத்தினம்வரை எதிரியை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## மாவிட்டபுரம் கொலை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

...த்தில் மீனுயர் கதிரவேலு ...தலத்தில் மாண்டார். கந்தையா நவரத்தினம் பலத்த காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர்களின் சார்பில் திரு. ஜே. ஆர். செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே வி. எஸ. சண்முகநாதன் ஆஜரானர்.

## இன்று

வண்ணை சிவன்கோவில் 11-ம் திருவிழாவில் மாலை 6 மணிக்கு திரு. வி. கே. ஆறுமுகம் "திருநீலகண்டர்" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## எதிரி விடுதலை

மாவிட்டபுரம், வெள்ளி

சென்ற வருடம் புரட்டாதி மாதம் 19-ந் திகதி வளலாயைச் சேர்ந்த வயிரமுத்து தமபுவிடம் 241 ரூபா பணத்தை கொள்ளையடித்ததாகவும் அவருக்கு கையால் தாக்கி காயம் விளைவித்ததாகவும் அதே ஊரைச் சேர்ந்த தம்பன் சின்னராசா மீது குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது வயிரமுத்து தம்பு சாட்சியமளித்தபின் நீதிபதி எதிரியை சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார்.

காங்கேசன்துறை உதவி இன்ஸ்பெக்டர் திரு. கந்தையாவின் உதவியுடன் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு, டி. கணேசலிங்கம் வழக்கை நடத்தினர். எதிரி தரப்பில் திரு. ரி. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜரானர்.

## பிரிட்டிஷ் மந்திரி ஜப்பான் புறப்பாடு

லண்டன், மார்ச் 29

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஹோம்பிரபு ஜப்பானிய பிரதமரின் அழைப்பிற்கிணங்க தமது மனைவி சகிதம் அங்கு புறப்பட்டிருக்கிருர்.

## கிராம சேவையாளர் நியமன இடங்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாவட்டத்து கிராம சேவையாளராக தெரிவு செய்யப்பட்டவர்கள் புதிதாக நியமனம் பெற்று கடமையாற்ற வேண்டிய இடங்கள் இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது. வருகிற மே மாதம் 1-ம் திகதியிலிருந்து அவ்வப்பகுதிகளில் கடமையாற்ற விருக்கும் கிராம சேவையாளர் வீடு, காரியாலயம் ஆகியவற்றை ஒழுங்கு செய்வதற்காக புதிய நியமன இடங்கள் இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளன.

சொந்த இடங்களில் எவரும் நியமனம் செய்யப்படவில்லை.

நியமன விபரங்கள் வருமாறு:

தீவுப்பகுதி காரியாதிகாரி பிரிவு

1. காரைநகர் வடக்கு: திரு. வே. சிவப்பிரகாசம், 2. காரைநகர் கிழக்கு: திரு. கே. செல்வநாயகம், 3. காரைநகர் மேற்கு: திரு. எஸ். கனகலிங்கம், 4. ஊர்காவற்றுறை: திரு. எஸ். அருளையா, 5. கரம்பன்: திரு ஈ. சுந்தரலிங்கம், 6. நாரந்தனை: திரு. பொ. புண்ணியமூர்த்தி, 7. வேலணைகிழக்கு: திரு என். அருளலிங்கம், 8. வேலணைமேற்கு: திரு எஸ் மகாலிங்கம், 9. சரவணை: திரு. டி. கமலநாதன், 10. அல்லைப்பிட்டி: திரு. ஈ. கே. தளையசிங்கம், 11. மண்டைதீவு: திரு. என். கதிர்காமநாதன், 12. புங்குடுதீவுகிழக்கு: திரு. எஸ். சந்திரசேகரம், 13. புங்குடுதீவுமேற்கு: திரு. வே. பொன்னம்பலம், 14. நயினதீவு: திரு. டி. பாலசிங்கம், 15. அனலைதீவு: திரு. வடிவேலு, 16. எழுவைதீவு: திரு. கே. கந்தசாமி.

வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி பிரிவு

1. கோப்பாய்தெற்கு: திரு. எஸ். ஆறுமுகம், 2. கோப்பாய்வடக்கு: திரு. கே. யோகலிங்கம், 3. நீர்வேலி: திரு. எஸ். சீவரத்தினம், 4. சிறுப்பிட்டி: திரு. கே. துரைசிங்கம், 5. அச்சுவேலி: திரு. எஸ். சோமசுந்தரம், 6. பத்தமேனி — இடைக்காடு: திரு. த. கிருஷ்ணராசா, 7. புத்தூர்மேற்கு: திரு. பி. இராமநாதன், 8. புத்தூர்கிழக்கு: திரு. எஸ். வேலாயுதம்பிள்ளை, 9. ஊரெழு: திரு. வி. சின்னத்துரை, 10. உரும்பராய்: திரு. அமிர்தலிங்கம்.

## ஜாகர்த்தாவில் ரஷ்ய மந்திரி

ஜாகர்த்தா, மார்ச் 29

ரஷ்ய பாதுகாப்பு மந்திரி மார்ஷல் மாலினேவ்ஸ்கி 10 நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும்பொருட்டு இந்தோனேஷியா வந்திருக்கிருர்.


**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது !

**முருகன்** (ஜிந்துப்பிட்டி)
**நவா** (கும்பெனித்தெரு)
**ஜஸீமா** (கிராண்ட்பாஸ்)
2, 6, 9-30 மணி
**ஓடியன்** (கல்கிசை)
2-15, 6, 9-30 மணி
**ஓடியன்** (கண்டி)
2-15, 6-15, 9-15 மணி
**ராஜா** (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45 மணி

ஜெமினி கணேஷன்
பி. சரோஜாதேவி
சந்திரபாபு, தேவிகா, எம். வி. ராஜம்மா, கே. டி. சந்தானம், பி. டி. சம்பந்தம்
மற்றும் பலர் நடித்த



**ஆடிப் பெருக்கு**

டைரக்ஷன்: கே. சங்கர்

**புத்தாண்டின் புனித விருந்து!**

**கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா**
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்!
பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்டபயங்கரசோதனை!
ஆசையும் நேசமும் பாசமும்
சந்தேகத்திற்கு பலியாகும் பரிதாபம்.

**அத்தனையும் புதிய படைப்பு!**

சிவாஜி கணேசன் — எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜா தேவி — ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
மற்றும் பலர் நடிக்கும்
— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

**ஆலய மணி**

டைரக்ஷன் கே. சங்கர் — இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

**4-வது வெற்றி வாரம் !**

**கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா**
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு

மற்றும் 5 திரைகளில்

சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்

சாவித்திரி
குமாரி ருக்மணி
வி. நாகையா
முத்துலட்சுமி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி
டி. கே. ஷண்முகம்
மற்றும் பலர் நடிக்கும்



பத்மினி பிக்சர்ஸ்

**கப்பலோட்டிய தமிழன்!**

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ராமச்சந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த

**தாய்சொல்லைத் தட்டாதே**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.